பக்கங்கள் : பதினாறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 06 சனிக்கிழமை (18.02.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :83

# உடன்பாட்டை சீராக அமுல் செய்வதன் ஊடாக மக்களின் இயல்புவாழ்வு என்பதே பேச்சின் கரு

## ஜெனீவா புறப்பட முன்பாக அளித்தபேட்டியில் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,பெப்.18

போர்நிறுத்த உடன்படிக்கையின் சரத்துகளை செவ்வனே நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழர் தாயகத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கையை உடனடியாக உருவாக்குதல் என்பதே ஜெனீவாப் பேச்சுகளின் முக்கிய கருப்பொருளாக இருக்கும்.



நேற்று கிளிநொச்சியில் இருந்து ஜெனீவா புறப்படமுன்பாக இப்படித் தெரிவித்தார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்.

ஜெனீவாவில் எதிர்வரும் 22 ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பேச்சுகளில் பங்குபற்றும் விடுதலைப் புலிகளின் உயர் மட்ட அரசியற்குழு நேற்று முற்பகல் 10.30 மணிக்குப் புறப்பட்டது.

கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டரங்கை வந்தடைந்த விமானப்படையின் ஹெலி மூலமே இந்தக் குழுவினர் பயணமானார்கள். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தென்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், சமாதான செயலகத்தைச் சேர்ந்த இளந்திரையன் மற்றும் ஜோர்ச், அலெக்ஸ் ஆகியோர் இந்தக் குழுவில் பயணமானவர்களாவர்.



சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தலைமையிலான மற்றொரு குழு தரைமார்க்கமாக நேற்றுக் கொழும்பு பயணமானது.

இரு குழுவினரும் கட்டுநாயக்கவில் இணைந்து நேற்று மாலை 3.45 மணியளவில் சுவிஸ் புறப்பட்டனர்.

ஜெனீவா புறப்பட முன் தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதில் அளித்தார்.

அவரின் செவ்வி வருமாறு:-

கே:- பேச்சுக்கான புறச்சூழல் முழுமையாக உருவாக்கப்படாத நிலையில் தமிழர் தாயகக் கோட்பாட்டை ஏற்கமாட்டேன் என ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவர் அவ்வாறு அறிவித்துள்ள நிலையிலேயே நீங்கள் பேச்சுக்குப் போகிறீர்கள். சர்வதேச அழுத்தம் காரணமாகவே நீங்கள் இவ்வாறு பேச்சுக்குப் போகிறீர்கள் எனக் கருதலாமா?

ப:- ஜெனீவாப் பேச்சு என்பது முற்று முழுதாக யுத்தநிறுத்த (02ஆம் பக்கம் பார்க்க)

### திருமலைக் கடலில் கைதாகிய

# நான்கு போராளிகள் பிணையில் விடுதலை!



விடுவிக்கப்பட்ட போராளிகள்

திருகோணமலை,பெப்ரவரி 18

திருகோணமலைக் கடற்பரப்பில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நால்வரையும் திருகோணமலை நீதிமன்றம் நேற்றுப் பிணையில் விடுதலை செய்தது. இவர்கள் நால்வரும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் பாதுகாப்புடன் நேற்று மாலை கிளிநொச்சி போய்ச்சேர்ந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு மீண்டும் ஏப்ரல் 6ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் என்று நீதிவான் வி. இராமகமலன் தெரிவித்தார்.

சிவபாத சுந்தரம் விஜயகுமார், ரஞ்சித் ஜெயக்குமார், எஸ்.சண்முகராஜா, லக்ஸ்மணன் அரவிந்தன் ஆகியோரே பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

உதவிப் பொலீஸ் சுப்ரின்டன் சேரசிங்க நேற்று நீதிமன்றத்தில் (16ஆம் பக்கம் பார்க்க)

# மற்றும் ஒரு பொலீஸாரை புலிகள் இன்று விடுவிப்பர்

கிளிநொச்சி, பெப்ரவரி 18

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைதாகி தமிழீழ நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த ஸ்ரீலங்கா பொலீஸாரில் மற்றும் ஒருவர் நல்லெண்ண அடிப்படையில் இன்று விடுதலை செய்யப்படுகிறார்.

மன்னாரில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய சமயம் கைதான மூன்று ஸ்ரீலங்கா பொலீஸாரில் ஒருவர் கடந்த 25ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைவரின் விசேட உத்தரவின்பேரில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

சமாதான முயற்சிகளை முன்நகர்த்துவதற்காக நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்ம், தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசிய பின்னர் நல்லெண்ண நடவடிக்கையாக பொலீஸாரில் ஒருவரை புலிகள் விடுவித்திருந்தனர். எஞ்சியுள்ள இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்களில் ஒருவரே இன்று காலை (16ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மானின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பாசறை ஒன்றில் இந்நிகழ்வு நடைபெற்றது. 1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம், நாவற்குழி ஸ்ரீலங்கா படைத்தளம் மீதான தாக்குதல் ஒன்றிற்கான முயற்சியில் மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மான் உட்பட 10 போராளிகள், நாட்டுப்பற்றாளர் ரஞ்சன் ஆகியோர் வெடிவிபத்தில் வீரச்சாவடைந்தனர். இந்த மாவீரர்களின் 19ஆம் ஆண்டு நினைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துகொண்டு வணக்கம் செலுத்தினார். இவ்வணக்க நிகழ்வில் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் கலந்துகொண்டனர்.(ஐ-190)

# ஜெனீவாப் பேச்சுகளின் போது ஊடகவியலாளருக்குக் கடிவாளம்

## ஜெனீவாவிலிருந்து 'உதயன்' விசேட பிரதிநிதி தகவல்

எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் ஜெனீவாவில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுகள் தொடர்பான செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதற்கு கடிவாளம் போடத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை அரச தரப்பின் கோரிக்கையை ஏற்று இவ்வாறு கடிவாளம் போடும்விதத்தில் சில நடைமுறை ஏற்பாடுகளை விதிப்பதற்கு அனுசரணையாளர்களும் பேச்சு நடைபெறும் இடத்தின் ஏற்பாட்டாளர்களும் தீர்மானித்திருக்கிறார்கள் எனத் தெரிகிறது.

உத்தேச நடைமுறை ஏற்பாட்டின்படி -.

புதனன்று காலையில் பேச்சு நடைபெறும் ஜெனீவாவின் 'சேட்டுடிபோஸி' அரண்மனைக்கு ஊடகவியலாளர்கள் சென்று பேச்சுக்குழுவினரைச் சந்திக்கவோ செய்தி சேகரிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.

பேச்சின் முன்னேற்றம் பற்றிய அறிக்கையும் இடையில் வராது.

வியாழனன்று இரண்டு நாள் பேச்சுகள் முடிவடைந்த பின்னர் - முன்னைய பேச்சுகளின் போது நடந்த மாதிரி - கூட்டுப் பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதா அல்லது இல்லையா என்பதுபற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இருதரப்புகளுக்குமிடையில் பேச்சுகளின் போது சுமுகமான - இணக்கமான - ஒரு நிலை எட்டப்பட்டால் மாத்திரமே பேச்சின் முடிவில் இரண்டு தரப்புப் பிரதிநிதிகளும் ஒன்றாக அமர்ந்து கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டை நடத்துவார்கள். (16ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி,பெப்.18

கடத்தப்பட்டிருக்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்குமாறுகோரி நேற்று கிளிநொச்சியில் மீண்டும் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றிருக்கிறது.


கிளிநொச்சி மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஏற்பாட்டில் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டனர்.


கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலடியில் இருந்து ஆர்ப்பாட்டப் பேரணி புறப்பட்டது. பின்னர் மாவட்ட அரச அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது. அங்கு வைத்து [illegible] (16ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**ஜெனீவாப் பேச்சில் கலந்துகொள்ளச் செல்லும் விடுதலைப் புலிகளின் குழுவினர் நேற்று கிளிநொச்சியில் உற்சாகமாக வழியனுப்பி வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: பிரபா)**

# வேட்புமனு நிராகரிப்பை ஆட்சேபித்து ஐ.தே.க. வழக்கு!

## தேர்தல் ஆணையாளருக்கு அறிவிப்பு

கொழும்பு,பெப்.18

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதறகாகச் சமர்ப்பிக்கப்பட்ட ஐ.தே.கவின் வேட்பாளர் பட்டியல் நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் போகின்றோம் என ஐ.தே.கவின் பொதுச் செயலாளர் என்.வி.கே.எச். வெரகொட தேர்தல் ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவித்திருக்கிறார்.

''வேட்புமனு நிராகரிக்கப்பட்ட வேளை இங்கு சமுகமளித்திருந்த எமது சட்டத் தரணி, நிராகரிக்க முடியாது என்பதற்கான காரணத்தை சொல்ல முற்பட்ட போது அதற்குக் கூட கால அவகாசம் தரப்படவில்லை. காரணத்தை அறிய முற்படாமலே வேட்புமனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்த முடிவு சட்ட விரோதமானது. இதன்மூலம்; எத்தனையோ ஆயிரக்கணக்கான கொழும்பு வாழ் வரியிறுப்பாளர்கள் தமக்கு விருப்பமான நகரபிதா ஒருவரை தெரிவு செய்ய முடியாத கையறு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

எனவே, இந்த சட்டவிரோத முடிவை விலக்கக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதி கேட்கவிருக்கிறோம். எனவே, எமது இந்த முயற்சிக்கு பங்கம் உண்டுபண்ணக் கூடிய எத்தகைய நடவடிக்கைகளிலும் தாங்கள் ஈடுபடமாட்டீர்கள் என எதிர்பார்க்கிறோம் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ-க)

# 22 தேர்தல் மாவட்டங்களிலும் 1,883 பேர் வேட்பு மனு

## அம்பாறையில் கூடுதலான சுயேச்சைக் குழுக்கள்

கொழும்பு, பெப். 18

நாட்டின் 330 உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக்குழுக்கள் சார்பாக மொத்தம் 1,883 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று உதவித் தேர்தல் ஆணையாளர் டபிள்யூ. பி. சுமணசிறி தெரிவித்தார்.

நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களிலும் இந்த வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 219 வேட்பு மனுக்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நிராகரிக் கப்பட்டுள்ளன. ஏற்றுக்கொள்ளப்பட்ட 1,664 வேட்பு மனுக்களில் அரசியல் கட்சிகளின் 1,323 வேட்பு மனுக்களும், சுயேச்சைக் குழுக்களின் 341 வேட்பு மனுக்களும் உள்ளடங்குகின்றன.

அரசியல் கட்சிகளினால் ஆகக் கூடுதலாக காலி மாவட்டத்தில் 89 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சுயேச்சைக் குழுக்கள் சார்பில் இம்முறையும் ஆகக்கூடுதலாக அம்பாறை மாவட்டத்திலேயே 44 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான இலக்கங்களை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது மிகவும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் உதவித்தேர்தல் ஆணையாளர் கூறினார்.

வேட்பாளர்களின் பெயர்களின் பிரகாரம் சிங்கள அகர வரிசையின் ஒழுங்குக்கு அமைவாக வேட்பாளர்களுக்கான இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ-க)

# உடன்பாட்டை சீராக அமுல் செய்வதன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடன்பாட்டை அமுல் நடத்துவது சம்பந்தப்பட்டதுதான்.

மக்கள் மீது தொடுக்கப்பட்டுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு, இராணுவ அச்சுறுத்தல்கள், இராணுவக் கெடுபிடிகள், கொலைகள், ஆள்கடத்தல்கள், மக்களை அச்சுறுத்தி வெளியேற்றல் போன்ற செயற்பாடுகளுக்குத் தீர்வு கண்டு யுத்தநிறுத்தத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தும் விடயம் மட்டுமே அங்கு பேசப்படும்.

ஆகவே, நாங்கள் சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்பை - அவர்களின் முயற்சியை - மதித்து ஜெனீவாப் பேச்சில் கலந்துகொள்கிறோம். நிச்சயமாக இலங்கை அரசு இதை உணர்ந்துகொண்டு, மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ ஆக்கிரமிப்பு - வன்முறை நெருக்குவாரங்களை - இல்லாமல் செய்து மக்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இந்தப் பேச்சில் எமது முக்கிய கரிசனையாக இருப்பது, மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ வன்முறை நிறுத்தப்பட்டு, மக்கள் ஓர் இயல்பு நிலைக்கு வரவேண்டும் என்பதே. இது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்று எங்களால் கூற முடியாது.

ஏனெனில், அண்மைக்காலமாக ஜனாதிபதியோ, அரசின் கூட்டுக் கட்சிகளோ, படைத்தரப்பினரோ காட்டி வருகின்ற - வெளிப்படுத்துகின்ற - கருத்துகள், செயற்படுகள் எல்லாமே முழுக்க முழுக்க ஓர் இராணுவ வன்முறையை, கடும் போக்கைத் தொடர்ந்து பேணும் நடவடிக்கை போன்றது என்றே எம்மால் உணரமுடிகின்றது.

இருந்தாலும், சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புக்கும் அவர்களின் வேண்டுகோளுக்கும் மதிப்பளித்து எமது தலைவரும் அமைச்சர் சொல்ஹெய்மும் சந்தித்து இணக்கம் காணப்பட்டதன் அடிப்படையிலேயே இந்தப் பேச்சுக்குச் செல்கின்றோம்.

எமது மக்களைப் பொறுத்த வரையில், எமது தாயகப் பிரதேசத்தில் இராணுவம் குவிக்கப்பட்டு, இராணுவ ஆக்கிரமிப்பு தொடருகின்ற வரை மக்கள் எதையும் நம்பமுடியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

இராணுவத்தினர் கொலைகள், அச்சுறுத்தல்கள், ஆள்கடத்தல் என தொடர்ச்சியான வன் முறையை எமது மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த 4 வருடங்களுக்கு முன்னர் யுத்த நிறுத்த உடன்பாடு நடைமுறைக்கு வந்த போது எமது மக்கள் பல எதிர்பார்ப்புகளை வைத்திருந்தார்கள்.

இராணுவ நெருக்குவாரம் இல்லாமல் போகும். இயல்பு நிலை வரும். மீள எமது சொந்த இருப்பிடங்களில் நாம் நிம்மதியாக வாழலாம். இப்படி பெரிய எதிர்பார்ப்புடன் குதூகலித்தார்கள் எமது மக்கள்.

இந்த நான்கு வருடங்களுப் பின்னாலே நாம் பேச்சுக்குப் போகப் போகிறோம். இந்த நான்கு வருடகாலமும் எமது மக்களுக்குக் கிடைத்தவை ஏமாற்றமும் விரக்தியும்தான். பாரிய நெருக்கடியைச் சந்தித்ததுதான் இதன் விளைவாக இருக்கின்றது.

ஆகவே, இதற்கு உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டும். எமது மக்கள் காட்டிய உறுதியும் அவர்கள் காட்டிய போராட்ட முன்னெடுப்பும்தான் இன்று இலங்கை அரசை ஓரளவேனும் பேசவேண்டும் என்ற நிலைக்காவது கொண்டுவந்துள்ளது.

அதற்காக சிங்களத் தலைமைகள் எங்கள் மக்களின் அபிலாஷைகளை - எதிர்பார்ப்புக்களை முழுமையாக நிறைவேற்றுவார்கள் என்பதை நாங்கள் உறுதியாகக் கூறமுடியாது.

அண்மைக்காலமாக அவர்கள் வெளிப்படுத்தி வருகின்ற கருத்துகள் முழுக்கமுழுக்க தமிழ்விரோத - தமிழர் தாயகத்துக்கு எதிரான - ஒரு குரோதமான கருத்துகளாகவே காணப்படுகின்றன.

படைத்தரப்பினர் கட்டவிழ்த்து விட்டுள்ள வன்முறையும் குறிப்பாக, மனிதாபிமானத் தொண்டர்கள் கடத்தப்பட்டதும் எமது போராளி கொலை செய்யப்பட்டதும் இப்படி பல்வேறு நிகழ்வுகள் இக்காலப்பகுதிக்குள் நடந்துள்ளன.

கடத்தப்பட்ட மனிதாபிமானப் பணியாளர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. இப்படியான பெரிய கொடூரமான - மோசமான - நடவடிக்கைகளை இந்தப் படைத் தரப்பினர் செய்துகொண்டு தான் இருக்கின்றது.

கே:- அரசுடன் பேச்சுகளைத் தொடர்வதற்கான களமாக ஜெனீவாப் பேச்சு அமையுமா?

ப:- நிச்சயமாக ஜெனீவாப் பேச்சு என்பது, முதலில் எமது தலைவர் வலியுறுத்தியமை போன்று மக்களுக்கு இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இராணுவ வன்முறை மற்றும் இராணுவ அச்சுறுத்தல் ஆகியன நீங்கி எமது தாயகத்தில் - எமது மண்ணில் இருந்து ஆக்கிரமிப்புப் படைகள் தங்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை விலக்கிக்கொள்ள வேண்டும். இது மிக முக்கியமானதொரு விடயம்.

இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கலில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதுதான் முக்கிய கருப்பொருளாக இருக்கும். அதுதான் முதன்மைப்படுத்தப்பட்ட விடயமாக இருக்கும். இது நடைமுறைக்கு வந்த பின்புதான் அடுத்த கட்டம் எதையும் எமது தலைமைப்பீடம் சிந்திக்கக்கூடியதாக இருக்கும்.

கே:- யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுலாக்கம் குறித்துப் பேசுவதுடன் எதிர்காலத்தில் இடம்பெறப்போகும் பேச்சுகளின் நிகழ்ச்சி நிரல் குறித்தும் பேசுவீர்களா?

ப:- யுத்தநிறுத்த அமுலாக்கம் இல்லாமல், கள நிலைமைகள் சீரடையா. இப்போது மக்கள் கொந்தளிப்பான நிலையில் இருக்கிறார்கள். மக்கள் ஜெனீவாவில் நடக்கப் போகும் பேச்சைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் பேச்சில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது வேறு. ஆனால், பேச்சை அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, அங்கீகரிக்கக்கூடிய தீர்மானங்கள்

(15ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பயங்கரவாதம் பற்றி வேதம் ஓதும் அமெரிக்காவின் தகைமை

சர்வதேசப் பொலீஸ்காரனாகத் தன்னைக் கருதி, உலக நாடுகளில் எல்லாம் அளவுக்கு மீறித் தலையிட்டு, மனித உரிமைகள் குறித்து அதிகம் பேசிவந்த அமெரிக்காவின் உண்மைச் சொரூபம் வெளியாகத் தொடங்கியிருக்கின்றது.

கியூபா எல்லையில் - தனது நாட்டிலிருந்து தொலைவில் - குவாண்டனமோ குடாவில் - பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஐநூறுக்கும் அதிகமானோரைத் தடுத்து வைத்திருந்து, நியாயமான விசாரணைகளுக்கு இடமளிக்காமல், அவர்களைச் சித்திரவதைக்கு உள்ளாக்கி வரும் அமெரிக்க அரச பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தியிருக்கின்றது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு.

சர்வதேச விதிமுறைகள், ஒழுங்குகள், வழக்காறுகள் என்று எவற்றையுமே கவனத்தில் கொள்ளாமல் இந்தக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்றும் முறையற்ற விதத்தில் நடத்தப்படுகிறார்கள் என்றும் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு தனது பிந்திய அறிக்கையில் பரபரப்புத் தகவல்களை வெளியிட்டிருக்கின்றது.

'உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை' என்ற பெயரில் பல்வேறு நாடுகளில் தனது செயற்பாடுகள் மூலம் தான் கைது செய்தோரை - பெரும்பாலும் இஸ்லாமிய அடிப்படை வாதிகளை - இப்படித் தடுத்து வைத்து, அநீதி புரிகிறது அமெரிக்கா என்பதே குற்றச்சாட்டு. 'உலக அமைதிக்கு எதிரான ஆபத்தான பேர்வழிகள்' என்று அமெரிக்கா விமர்சிக்கும் இந்தக் கைதிகளுக்கு நியாயமான விசாரணைக்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தபோது கண் துடைப்புக்கு சில நீதிபதிகளை இவ்விடயம் குறித்து விசாரிக்க நியமித்தது அமெரிக்கா. நான்கு வருடங்களுக்கு அதிகமாக ஐநூறு பேர் அடைத்து வைக்கப்பட்டிருக்க, ஆக ஒன்பதே ஒன்பது கைதிகள் குறித்து மட்டுமே இதுவரை விசாரணைகள் முடிவடைந்திருக்கின்றன என்று தகவல் வெளியிடுகின்றன மனித உரிமைகள் அமைப்புகள்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டுமல்ல, 'ஹியூமன் ரைட்ஸ் வோச்', சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற பல மனித உரிமை அமைப்புகள் அமெரிக்காவின் இந்த மனித உரிமை மீறல்களைப் பல தடவைகள் சுட்டிக்காட்டிய பின்னும் அமெரிக்கா திருந்துவதாக இல்லை.

'ஊருக்கடி உபதேசம்; உனக்கில்லையடி' என்பது போல, 'உலகப் பயங்கரவாதம்' என்ற விவகாரம் குறித்து அதிகம் தத்துவம் பேசி உலக நாடுகளுக்கெல்லாம் உபதேசம் செய்யும் அமெரிக்கா, தனது கொல்லைப்புறத்தில் தான் புரியும் பயங்கரவாதம் குறித்து அலட்டிக் கொள்ளாமல் இருப்பது விநோதமானது.

மனித குலத்துக்கு பேரழிவு தரும் ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருக்கின்றது என்று ஒரு தலைப்பட்சமாகக் குற்றம் சுமத்தி, உலக நாடுகள் பலவற்றினதும் எதிர்ப்புகளையெல்லாம் மீறி, ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியைக் கூடப் பெறாமல், ஈராக்கை ஆக்கிரமித்தன அமெரிக்கா தலைமையிலான நேச அணிகள். இன்று அங்கு என்ன நிலைமை?

பேரழிவு தரும் ஆயுதம் ஏதும் அங்கு இல்லவே இல்லை என்பது உறுதியாகி விட்டது. ஆக்கிரமிப்புக்குத் தான் காட்டிய காரணம் வெறும் 'கப்ஸா' என்பதை அமெரிக்காவே ஒப்புக் கொள்ளும் நிலைமை. அது மாத்திரமல்ல, உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான தனது நடவடிக்கை என்ற பெயரில் தான் முன்னெடுத்த இந்த ஆக்கிரமிப்பால் ஈராக் இன்று, பயங்கரவாதம் விளையும் வயலாக, அழிவுகளுக்கான உறைவிடமாக, மரணங்கள் மலிந்த பூமியாக மாறியிருக்கும் அவலத்தைப் பார்த்து அமெரிக்காவே திகைத்துப் போய் நிற்கின்றது.

'உலகப் பயங்கரவாதத்துக்கு' எதிராகப் போர் புரிகின்றவர்களாகத் தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டோர், ஈராக்கின் அபுகிறைப் சிறையில் புரிந்த பயங்கரவாதம் இன்று உலகெங்கும் வீடியோக்களில் வெளியாகி அமெரிக்காவின் 'பெருமையை' பறைசாற்றி நிற்கின்றன.

'இஸ்லாமிய அடிப்படைவாதத் தீவிரவாதிகள்' என்றும், 'பயங்கரவாதிகள்' என்றும் தான் கருதிய நபர்களை மேற்கு நாடுகளில் இருந்து அந்தந்த நாடுகளின் சட்ட, ஒழுங்கு விதிகளுக்குப் போக்குக்காட்டி விட்டு, பாதுகாப்பு ஏற்பாட்டாளர்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, அமெரிக்கக் கூலிப்படைகள் அவ்வப்போது கடத்திச் சென்றமை குறித்தும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்த அத்துமீறல்கள், அட்டூழியங்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் குறித்து அமெரிக்கத் தரப்பு என்ன சாக்குப் போக்கு விளக்கம் கூறினாலும் உலகம் அதை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

ஐ.நா.சபையின் அனுமதியின்றி ஈராக்கை ஆக்கிரமித்து அராஜகம் புரிந்த அமெரிக்கா, இப்போது அதன் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழு முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் காரணமாக சர்வதேசத்தின் முன்னால் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.


அரச பயங்கரவாத அடக்குமுறைகளுக்கு எதிராகத் தமது விடுதலை வேண்டியும், உரிமைகளுக்காக, நீதி தேடியும், தத்தமது தாயகங்களில் சுதந்திரப் போராட்டம் நடத்தும் விடுதலை அமைப்புகளை 'பயங்கரவாதம்' புரியும் இயக்கங்களாக - ஒரு தலைப்பட்சமாக - சித்திரித்து வரும் அமெரிக்கா, இப்போது அடுத்த நாடுகளுக்குள் புகுந்து அது புரியும் அட்டகாசங்களை 'பயங்கரவாதமாக' உலகம் சித்திரிக்கும் நிலையை எதிர்கொள்கிறது.

எனவே, இந்தப் பின்னணியில் பார்க்கும்போது தானே பயங்கரவாதம் புரிந்து கொண்டு 'உலகப் பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கை' என்று அமெரிக்கா தத்துவம் பேசுவது 'சாத்தான் வேதம் ஓதுவது' போன்றதாகும்.

# காக்கைதீவு கிணற்றில் விலங்குக் கழிவு குடிதண்ணீர் பெறுவதில் மக்கள் சிரமம்

## கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் முறைப்பாடு





குடிதண்ணீர் கிணற்றினுள் கழிவுப் பொருள்கள் கொட்டப்பட்டிருப்பதையும் நீர் விநியோகக் குழாயில் துவாரம் ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

யாழ்ப்பாணம்,பெப்.18

ஆனைக்கோட்டை காக்கைதீவுப் பகுதியில் குடியிருப்புகளுக்கு இடையில் அமைந்துள்ள பொதுக்கிணறு ஒன்று விலங்குகளின் கழிவுகள் மற்றும் குப்பைகள் கொட்டப்பட்டு அசுத்தப்படுத்தப்பட்டுள்ளது என்றும் -

அத்துடன் காக்கைதீவுப் பகுதி மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கெனப் பொருத்தப்பட்டுள்ள நீர் வழங்கு குழாய்கள் இடைஇடையே சேதமாக்கப்படுவதுடன், குழாய்களில் துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றினூடாக கழிவு ஓயில் ஊற்றப்படுவதாகவும் - அந்தப் பிரிவிற்கான கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இடம்பெற்ற கோஷ்டி மோதலைத் தொடர்ந்து இவ்வாறான சமூக விரோதச் செயல்கள் இடம்பெற்று வருகின்றன என்று மேற்படி கடற்றொழிலாளர் சங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயமாக மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

காக்கைதீவுப் பகுதியினருக்கும் ஆனைக்கோட்டை 3ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கோஷ்டி மோதலை அடுத்து எமது பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் பலர் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன், எமது மக்கள் அன்றாடம் பாவிக்கும் சவக்காலையில் உள்ள கிணற்றில் விலங்குகளின் கழிவுகள், குப்பை கூழங்கள் என்பன போடப்பட்டு பாவனைக்கு மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன், குடிதண்ணீர் விநியோகத்திற்கென பொருத்தப்பட்டிருந்த குழாய் இணைப்புகள் கடந்த 13ஆம் திகதி வெட்டிச் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மானிப்பாய் பிரதேசசபைக்கு நாம் அறிவித்தல் கொடுத்தோம். அவர்கள் உடனடியாக அதனைச் சீர்செய்து தந்தனர்.

பின்னர், மீண்டும் வேறொரு குழாய் இணைப்பு ஒன்று வெட்டி சேதப்படுத்தியுள்ளதுடன் குழியில் ஏற்படுத்தப்பட்டுள்ள துவாரம் மூலமாக கழிவு ஓயில் ஊற்றப்பட்டுள்ளது.

இதனால், எமது பகுதியில் உள்ள பொதுமக்கள் குளிப்பதற்கும் குடிப்பதற்கும் நீர்வசதியின்றி அவதிப்படுகின்றனர்.

இதுதொடர்பாக அப்பகுதி கிராம சேவையாளர் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றுக்கும் நாம் அறிவித்துள்ளோம் - என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-13)

**உதயவாக்கு**

நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை.

- ஓர் அறிஞர்.

**நாளை**

மாசி 07
ஞாயிற்றுக்கிழமை
19.02.2006
திதி: ஷஷ்டி
முன்னிரவு: 08.10 வரை
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு : 10.17
சுபநேரம் : 09.32 - 11.02
ராகுகாலம் :05.02 - 06.32
(யாவும் பழைய நேரப்படி)

# சண் அங்கிள் எழுதிய நூலின் அறிமுக விழா

வலி.தென்மேற்கு,பெப்.18




நகைச்சுவை எழுத்தாளர் பொ.சண்முகநாதன் (சண் அங்கிள்) நினைக்க... சிரிக்க... சிந்திக்க... என்னும் தலைப்பில் உதயனில் தொடராக எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள் உள்ளடக்கிய நூலின் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் டாக்டர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ சி.சிவசரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் வரவேற்புரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க.சிவாஜியும் வாழ்த்துரையைச் சாகித்தியரத்தினம் தி.ச. வரதராசனும் (வரதர்) நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசியர் கலாநிதி சி.சிவலிங்கராசவும் மதிப்பீட்டுரையை பதில் நீதிபதி மு.திருநாவுக்கரசு (விகடகவி)வும் நிகழ்த்தவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை மானிப்பாய் சுந்தர்சன் நிறுவன உரிமையாளர் சு.சிவகுமார் பெற்றுக்கொள்வார். இதனையடுத்து சிறப்புப் பிரதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

நிகழ்வின் நிறைவில் நூலாசிரியர் பொ.சண்முகநாதனின் ஏற்புரையும், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் நிறைவுரையும் இடம்பெறும்.

(3-135-203-202)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன செவ்விளநீர் தென்னங்கன்றுகளும் ஒரு மாதம் மட்டும் பாவித்த குளிரூட்டி (Air Candition West Point) நன்றாக வேலை செய்யும் நிலையில் உள்ளதும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 272, ஆனந்தன்வடலி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 021 222 6338 அல்லது 0777293265. (46931)

NPMA xxxx தொடரிலக்கமுடைய பஜாஜ் பல்சர் 180 CC 5000 km ஓடியது. அலோவீல் விற்பனைக்குண்டு. தொடர்பு: 54, ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி அருகில்), யாழ்ப்பாணம். (46899)

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, பலாலி றோட்டிற்கு அருகில் புதிய வீடு 3 அறை, இணைந்த குளியலறை கொண்டது. முற்றிலும் (Tiles) பதிக்கப்பட்டது. சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773114791, 021 222 6379. (46902)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/47921)

## கார் விற்பனைக்கு

மொடல் HONDA-301-xxxx முதற்பதிவு 99 BRAND NEW 72000km ஓடியது, ONE OWNER FULL OPTION CAR விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: 61, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம் (சுண்டுக்குளி அருகில்). T.P.No: 0777 305533 பார்வையிடும் நேரம் ஞாயிறு 9 a.m - 6 p.m. (C/47904)

## காணி விற்பனைக்கு

கொக்குவிலில் கே.கே.எஸ். வீதியில் இருந்து 200 யார் தூரத்தில் நந்தாவில் வீதியில் 3¾ பரப்புச் சற்சதுரக் காணி விற்பனைக்குண்டு. இந்தக் காணியை இரண்டாகப் பிரித்துப் பாவிக்க ஒழுங்கை வசதியும் உண்டு. தொடர்பு: T.P.: 0714220003. (சி/47913)

40/2, கொழும்புத்துறை, சுண்டுக்குளியில் கிணற்றுடன் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு: T.P.: 222 6430 (46928)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

60 நாள்கள் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு (கறுப்பு நிறம், பூச்சி நீக்கப்பட்டது). தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (46852)

## தவறிவிட்டது

வீரக்காமம், தெல்லிப்பழையைச் சேர்ந்த சஞ்சு சண்முகதாசன் என்பவருடைய தே.அ.அ. (இல.847841109V), வி.அ.அ. (இல.0902043179) என்பன சிவப்பு நிற மஞ்சள் பேர்ஸுடன் உரும்பிராய் பகுதியில் கடந்த 13.02.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 222 5609, 0776949781 (46925)

கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் என்ற முகவரியுடைய சந்திரநாதன் இராசமலர் என்பவருடைய தே.அ.அட்டை இல. 526334663V தெல்லிப்பழையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இல.19/1, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. (தகுந்த சன்மானம் வழங்கப்படும்) (46933)

T.கௌரிநாதன் என்பவரது M.K.xxx தொடரிலக்கமுடைய T.V.S. Star City மோட்டார் சைக்கிள் புத்தகம் யாழ்.நகருக்கும் கொக்குவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிள்ளையார் மில், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P.: 0779597156 (46919)

## BRIDEGROOM WANTED

FOR MY NIECE, HINDU AGED 34, ENGLISH TRAINED TEACHER, FAIR COMPLEXION, PRESENTABLE LOOKS. A STATE SERVICE, BANK, CORPORATION, MERCANTILE QUALIFIED TEACHER WITHIN 40 YEARS OF AGE. DOWRY AVAILABLE. SANMUGARAJAH VALUER, 387 TEMPLE ROAD NALLUR, JAFFNA. (46906)

## வாகனங்கள் வாடகைக்கு

கார், வான், மோட்டார்சைக்கிள் என்பன SELF-DRIVE வாடகைக்கு வழங்கப்படும். அத்துடன், சாரதி அனுமதிப் பரீட்சைக்கான மோட்டார் சைக்கிள், திருமணக்கார் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: 360, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்). T.P.: 021 222 9154, 0777 593722. (46335)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 20.02.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது [illegible] தித்துறை - நெல்லியடிக் கிளைகளி[illegible] கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, [illegible] - சாவகச்சேரி, நல்லூர் பாம் [illegible] முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/47782)

## மணமகள் தேவை

இந்து கோகுலம், 33 வயது வயது, இற்ற மற்ற, உத்தராடம் 2ஆம் பாதமுடைய, கனடாவில் பணிபுரியும் இலங்கை M.Sc. பொறியியலாளருக்கு 30 வயதிற்குட்பட்ட, நற்குணமுள்ள, நன்கு படித்த, அழகான மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு: விளம்பர இல. 2807. மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (46907)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975 (M.B.B.S.) Doctor (சைவம்), 1974 (M.B.B.S.)Doctor, 1975 கொம்பியூட்டர், எஞ்சினியர், 1966 பட்டதாரி, 1974 B.A. ஆசிரியர் ஆகிய மணமகன்களுக்கு அழகிய மணமகள்மார் தேவை. தொடர்பு: கிருஷ்ணா திருமண சேவை, T.சுப்பையா, செங்குந்த வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். T.P.: 021 222 9032 (46935)

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1969, ஆயிலியம் 2ஆம் பாதம், 28 பாவம், 5'6'' உயரம் உடைய இங்கு A/L வரை படித்து, லண்டனில் சொந்த சுப்பர் மார்க்கற் வைத்திருக்கும் அழகிய சிவந்த, நற்குணமுள்ள மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: சிவா திருமண சேவை, கொடிகாமம் றோட், துன்னாலை தெற்கு, கரவெட்டி. T.P.:0776243114 (46897)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ, 34 வயதுடைய, மிருகசீரிட நட்சத்திரம், ஆங்கில பயிற்சி பெற்ற ஆசிரியைக்குத் தகுந்த வரனைப் பெற்றோர் தேடுகிறார்கள். தகுந்த சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு: சண்முகராஜா, மதிப்பாளர், 387, கோவில் வீதி, நல்லூர் - யாழ்ப்பாணம். (46905)

## சுகவாழ்வு நிலைய புதிய நிர்வாகம்

யாழ்ப்பாணம்,பெப்.18

சுகவாழ்வு நிலையத்தின் 2006ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி நிலையத்தின் மண்டபத்தில் இந்த நிர்வாகத்தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதில் தலைவராக அருட்திரு. டேமியன், உபதலைவராக கே.ஸ்ரீபதி, செயலாளராக திருமதி எஸ். சிவச்சந்திரன், உப செயலாளராக கே. எஸ்.ரகு, பொருளாளராக ஏ.செந்தூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், இந்த நிர்வாகத்திற்கு நிர்வாகசபை உறுப்பினராக ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-13)

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் தையல் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ளவர்களை மார்ச் முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

678, கே.கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ-203)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

றோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:- ROYAL INDUSTRIES COLOMBO 12 ☎:0777-277670

அனைத்துப் பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்




ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப்பூங்கா, 285, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎: 021 222 2587 (C-43109)

கிளிநொச்சி மாவட்டச் செயலகமும்
இலங்கை விதிப் போக்குவரத்து கல்வி நிறுவனமும் இணைந்து
தமிழீழ போக்குவரவுக் கழகம்,
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிலையம்
ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தும்

திரு.த.பேரின்பநாயகம்
(ஓய்வுபெற்ற பிரதிப் பொலீஸ்மா அதிபர், போக்குவரத்து)
அவர்களால் எழுதப்பட்ட
சாரத்தியம் (சவால்களும் சாமர்த்தியமும்)
"Driving" (Challenges and the Essential Skills)

## நூல் அறிமுக விழா

இடம்: பண்பாட்டு மண்டபம், கிளிநொச்சி
காலம்: 2006-02-19 ஞாயிறு மாலை 5 மணி

பிரதம விருந்தினர்
திரு.தி.இராசநாயகம் அவர்கள்
(அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்)

சிறப்பு விருந்தினர்
திரு.சோ.தங்கன் அவர்கள்
(அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், தமிழீழம்)
திரு.சோ.வெற்றிஅரசன் அவர்கள்
(தலைவர், வணிக ஒன்றியம், நிதித்துறை)
திரு.வீ.குட்டி அவர்கள்
(பணிப்பாளர், தமிழீழ போக்குவரவுக் கழகம்)

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தினரும்
தமிழீழ போக்குவரவுக்கழகத்தினரும்.

(சி/47933) (24-19-45)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று முல்லைத்தீவு

வழ. இல.: 504/05
தன்மை: விவாகரத்து

பாலகிருஸ்ணன் - சத்தியபவான்
மூங்கிலாறு, உடையார்கட்டு.
- வழக்காளி

எதிர்,
சத்தியபவான் - சுகந்தினி
துர்க்கையம்மன் கோயிலடி,
2ஆம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.
- எதிராளி

### இடைக்காலத் தீர்வை

மேற்படி வழக்கானது முல்லைத்தீவு மாவட்ட நீதியாளர் செல்வி த.தனுஷா அவர்கள் முன்னிலையில் வழக்காளியும் அவர் சார்பில் சட்டவாளர் திரு.த.பரஞ்சோதி அவர்களும் தோன்றியிருக்க எதிராளி மேற்படி நிரந்தர முகவரியில் இல்லையென அறிக்கைகள் பெறப்பட்டபின், 2005.09.10ஆம் திகதிய தினசரி பத்திரிகையில் அறிவித்தல் செய்யப்பட்டும் எதிராளியோ அவர் சார்பில் அக்கறையுடையவர்களோ யாரும் தோன்றாத காரணத்தால் 2005.12.20 ஆம் திகதியில் ஒருமுக விளக்கம் நடத்தப்பட்டு பின்வருமாறு இடைக்காலத் தீர்வை வழங்கப்பட்டது.

இதன் பிரகாரம் இரு தரப்பினருக்குமிடையிலான திருமணப் பதிவினை இரத்துச் செய்து ஏனைய நிவாரணங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் இடைக்காலத் தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில் தீர்வை பதியப்படுகிறது. இவ் இடைக்காலத் தீர்வையும் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு 21 நாள்கள் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கத் தவறின் இவ் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் எனவும் அறிவித்தல் தரப்படுகின்றது.

வரைவு:
வழ./சட்டவாளர்.

ஒப்பம்: த.தனுஷா
மாவட்ட நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று, முல்லைத்தீவு

(சி/47935) (24-19-45)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 26 - 08 - 1933
உதிர்வு 19 - 01 - 2006



### திருமதி புவனேஸ்வரி நவரத்தினம்

அன்பின் திருவுருவே அம்மா!
பாசத்தின் மணிமகுடமே!
ஆறாத் துயரில் எமை ஆழ்த்தி
மீளாத் துயில்கொண்டதேனோ?
மாதம் ஒன்று சென்றாலும் - உன்
பூமுகம் மறக்குமா என் மனம் அம்மா!

எங்கள் அன்புத் தெய்வம் அணைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து சிறப்பித்தோருக்கும் தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (18.02.2006) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் பங்கேற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

டச்சு றோட்,
கோப்பாய் தெற்கு, இருபாலை.

துயருடன் நினைவு கூரும்:
அன்பு மகள் மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பிப்பிள்ளை பொன்னம்பலம்



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் 15.02.2006 அன்று நீர்வேலியில் காலமானார்.

அன்னார் கண்மணியின் அன்புக் கணவரும் தங்கநாயகி (இந்திரா), தங்கராணி (சந்திரா - ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும் தவராசசிங்கம், சோதிராசா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும் திவ்வியா (நுண்கலைப்பீடம், 4ஆம் வருடம், யாழ். பல்லைக்கழகம்), தரணீதரன் (கனடா), காயத்திரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), சியாமளா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), தாரணி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), நிரஞ்சன், கஜானா (ஜேர்மனி), சதீஸ்குமார் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.02.2006) ஞாயிற்றுக்கிழமை அவரது நீர்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் நீர்வேலி மாசிவன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.
T.P.: 0776255345 (46895) (24-19-45)

தகவல்:
ஐ.தவராசசிங்கம்
(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு இந்தவருடம் ஆசிரியர் நியமனம்

## அடுத்தமாதம் வர்த்தமானி அறிவித்தல் என்கிறார் கல்விஅமைச்சர்

திருகோணமலை,பெப்.18

வருட இறுதிக்குள் பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும். அதில் இரண்டாயிரத்து 500 தமிழ்மொழி மூலப் பட்டதாரிகள் உள்ளீர்க்கப்படுவர்.

இவ்வாறு தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளார் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் தலைமையிலான குழுவினர் அண்மையில் கல்வி அமைச்சரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்த செய்திக் குறிப்பில்:-

பத்தாயிரம் பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வது தொடர்பான அறிவித்தல் வர்த்தமானியில் மார்ச் மாதம் வெளியிடப்படும் என்றும் -

நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நிதி திட்டமிடல் உதவியாளர் போன்ற பதவிகளில் பாடசாலைகளில் சேவையாற்றும் அனைத்துப் பட்டதாரிகளையும் ஆசிரியர்களாக நியமிக்க ஆவன செய்யப்படும் என்றும் -

இதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை அடுத்து, அமைச்சரவைக் கூட்டத்தில் பெற விருப்பதாகவும் கூறிய கல்வியமைச்சர் வேறு திணைக்களங்களில் கடமையாற்றும் பட்டதாரிப் பயிலுநர்களில் விரும்பியவர்களுக்கு ஆசிரியர் தொழிலை வழங்கப் பரிசீலிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நுண்கலை டிப்ளோமாப் பட்டம் அல்லது நுண்கலைப் பட்டதாரிப் பட்டம் பெற்றவர்கள் வேறு திணைக்களங்களில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கற்ற துறைக்கும் பெற்ற பயிற்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை; பொருத்தமுமில்லை. எனவே, இவர்களை ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும் எனச் செயலாளர் த.மகாசிவம் கேட்டதற்கு இது நியாயமான கோரிக்கை என்றும் - பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாகவும் - அமைச்சர் கூறினார்.

**கல்வியமைச்சில் தமிழ்ப் பிரிவு**

கல்வியமைச்சில் தமிழ்மொழி மூலக் கல்விப்பிரிவு கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டுமென பொதுச் செயலாளர் த.மகாசிவம் கோரிக்கை விடுத்தார். சங்கத்தின், கோரிக்கைகளை கல்வியமைச்சின் மீள் கட்டுமானத்திற்கென நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் சமர்ப்பிப்பதாக அமைச்சர் கூறினார்.

இக்குழுவில் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விச் செயலர் இ.தியாகலிங்கமும் உள்ளார். தமிழ்மொழிக் கல்விக்கென ஒரு பிரதிப் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்பட வேண்டும். தமிழ்மொழி மூலக் கல்விக் கென கல்விப் பணிப்பாளர் தரத்திலான பிரிவு கல்வி அமைச்சில் ஏற்படுத்தப்படவேண்டும்.

முஸ்லிம் பாடசாலைப் பிரிவு, தோட்டப் பாடசாலைப் பிரிவு ஆகியன பணிப்பாளர் தரத்திலான பிரிவுகளாகத் தரம் உயர்த்தப்படவேண்டும். சிங்களமொழி, பௌத்த மதம் என்பவற்றிற்கு பணிப்பாளர் தரத்திலான பிரிவு இருப்பது போன்று தமிழ்மொழி மற்றும் இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயங்களுக்கும் பணிப்பாளர் தரப்பிரிவுகள் அமைக்கப்படவேண்டும் என்று மகாசிவம் கேட்டுக்கொண்டார் - என்று அதில் உள்ளது.(எ)

## திருக்கேதீஸ்வரம் பற்றிய நூல்களின் வெளியீடு

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபை கொழும்பு சிவத்திரு மன்றத்தின் ஒத்துழைப்புடன் இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையாவின் ஆக்கங்களான 'திருக்கேதீஸ்வர மான்மியம்', 'கரந்துறைக் காண்டம்', 'நித்திய நைமித்திய காண்டம்' என்னும் நூல்களை வெளியிட்டு வைக்கவுள்ளது. இவற்றின் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபைத் தலைவர் இ.நமசிவாயம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நயப்புரைகளை சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சு.செல்லத்துரை, சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் ஆகியோர் நிகழ்த்துவர். (எ-202)

## ஞானோதய சபையின் மணிவிழா இன்று

தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் மணிவிழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய சிவஸ்ரீ மு.சிவகடாட்சக் குருக்கள் இசையரங்கில் நடைபெறவுள்ளது. தெல்லிப்பழைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். கைலைநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மணிவிழா மலர் வெளியீடு, சபைத் தலைவர் கௌரவிப்பு என்பவற்றைத் தொடர்ந்து சபை மாணவர்களின் கலைநிகழ்வுகள், பல்கலைக்கழக மாணவிகளின் இன்னிசைக் கச்சேரி, வாத்திய இசை என்பன இடம்பெறவுள்ளன. (எ-12)

# 2005ஆம் ஆண்டு பட்டியலின்படி வாக்களிப்பு நடக்குமா? தேர்தல் ஆணையாளரின் முடிவு 28ஆம் திகதி நீதிமன்றுக்கு!

## பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.18

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை 2005ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்துவதா, இல்லையா என்பது தொடர்பில் தேர்தல் ஆணையாளரின் அபிப்பிராயத்தைப் பெற்று நீதிமன்றத்தில் அறிவிப்பதாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஷாமிந்திர பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அறிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை 2005ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் நடத்த தேர்தல் ஆணையாளரை உத்தரவிடக்கோரி ராஜகிரியவைச் சேர்ந்த கருணாரட்ன என்ற 18 வயது இளைஞர் தாக்கல்செய்திருந்த மனு நேற்றுமுன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே. ஸ்ரீபவன், சிசிர டி ஆப்ரூ ஆகியோர் முன்னிலையிலேயே இந்த மனு மீதான விசாரணை நடைபெற்றது. நேற்று மன்றில் மனுதாரர் சார்பில் கருத்து வெளி யிட்ட சிரேஷ்ட சட்டத்தரணி உப்புல் ஜய சூரிய, 2004 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல் இடம்பெற்றால் சுமார் ஏழு லட்சம் பேரின் வாக்களிக்கும் உரிமை இல்லாமற் போகுமென்று சுட்டிக்காட்டினார். இதற்கான காரணங்களையும் ஆதாரங்களையும் அவர் மன்றில் விளக்கினார்.

இதனையடுத்தே, இதுவிடயத்தில் தேர்தல் ஆணையாளரின் அபிப்பிராயத்தைப் பெற்று நீதிமன்றத்தில் அறிவிப்பார் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகியிருந்த பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் தெரிவித்தார். இதனையடுத்து, மனு மீதான விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (எ-க)



யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தென்மராட்சி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி கிருபா வீரசிங்கம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். மேடையில் தரம் ஒன்று மாணவர்களும் அதிபர், ஆசிரியர்களும் சுவாமிகளும் படத்தில் உள்ளனர். (எ)

# ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு வெளிவாரியாகத் தோற்றுவோரின் விவரம் கல்வியமைச்சால் பதிவு

யாழ்ப்பாணம்,பெப்.18

2007 ஆம் ஆண்டு ஏப்ரலில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கு முதல் தடவையாக வெளிவாரிப் பரீட்சார்த்திகளாகத் தோற்றவிருப்போர் விவரங்களை மாகாணக் கல்வித் திணைக்களங்கள் பதிவுசெய்து வருகின்றன.

எனவே, அடுத்த வருடம் முதற் தடவையாக மேற்படி பரீட்சைக்கு வெளிவாரியாகத் தோற்றவிருப்போரும் ஏற்கனவே தோற்றிய பாடவிதானம் அல்லது குறைந்தது ஒரு பாடத்தையேனும் மாற்றி மீண்டும் வெளிவாரியாக விண்ணப்பிக்கவிருப்போரும் தமது பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர் தமது முகவரிக்குரிய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் 30.03.2006 ஆம் திகதிக்கு முன்னர் 575 ரூபா காசுக்கட்டளையுடன் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.

தமது பதிவுகளை மேற்கொண்ட பின்னர் இணைக்கப்படும் பாடசாலையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதாக அப்பாடசாலை அதிபர் உறுதி செய்த பின்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

01.07.2006 ஆம் திகதியன்று 21 வயதை நிறைவு செய்த சகல வெளிவாரி விண்ணப்பதாரிகளும் மேற்படி நடைமுறைகளிலிருந்து விடுவிக்கப்படுவதனால் தமது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-202)

# மெய்வன்மைப் போட்டிகள்

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் பவள விழா ஆண்டிற்கான இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதம அஞ்சல் அதிபர் க.ஞானலிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதன், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ-12)

* * *

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சு.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கணக்காளர் ந.யோகேந்திரராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் முன்னாள் அதிபர் வை.கணேசமூர்த்தி, சண்டிலிப்பாய் கிராம அலுவலர் லோ.அருள்ராஜ் ஆகியோரும் கலந்துகொள்வர். (3-12)

* * *

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ந.தெய்வேந்தரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பேராசிரியர் மா.நடராசசுந்தரம் கலந்து கொள்வார். வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களைத் திருமதி மங்களேஸ்வரி நடராச சுந்தரம் வழங்குவார். (3-118-122)

* * *

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வே. மோகனநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சண்முகசுந்தரமும் அவரின் பாரியார் ச.சுந்தரேஸ்வரியும்கலந்து கொள்வர். (3-69)

* * *

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் க.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கலந்துகொள்வார்.

கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி க. அம்பலவாணரும் இளைப்பாறிய அதிபர் சி. சிவச் செல்வமும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (3-118)

* * *

உரும்பிராய் இந்துக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பாடசாலை முதல்வர்அ.ஈஸ்வரநாதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இலங்கை [illegible] சுன்னாகம் பிரதேச [illegible] மு.அமுதலிங்கமும் சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரமும் கலந்து கொள்வர். (3-72)

* * *

புலோலி, புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் கல்லூரி அதிபர் மு. அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி சு.திருச்செல்வநாயகம் கலந்துகொள்வார். பரிசில்களைப் பருத்தித்துறை நகரசபை செயலாளர் திருமதி கமலாசினி திருச்செல்வநாயகம் வழங்குவார். (3-118)

* * *

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடைபெறவுள் ளது.

இதில் யாழ்.கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் கே.குமாரசுவாமி பிரதம விருந்தினராகவும் கலந்துகொள்வார். (எ-11)

* * *

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைக் கோட்ட உதவி கல்விப் பணிப்பாளர் சோ. தில்லைநாதன் கலந்துகொள்வார்.

(எ-188-202)

* * *

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் அதிபர் அ.சதானந்தன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் தனபாலசிங்கமும் சிறப்பு விருந்தினராக ஆனைக்கோட்டை கிராம உத்தியோகத்தர் வை. சந்திரராசாவும் கலந்துகொள்வர். (எ-100)

* * *

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் வண.பிதா எம்.யேசுதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.இராஜேந்திரம் இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (எ-51)

* * *

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று, சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பிரதம அதிதிய[illegible] வலிகாமம் கல்விவலய உடற்கல்வி உ[illegible]வி கல்விப் பணிப்பாளர் வி.பாலசிங்கம் [illegible]ந்து கொள்வார். (எ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவாலியில் நெல் அறுவடை மும்முரம்

நவாலி, பெப்.18

நவாலிப் பகுதி வயல்களில் நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. பல்வேறு சிரமங்களின் மத்தியில் நெற்செய்கை மேற்கொண்ட விவ் சாயிகள் பலரும், நெல் அறுவடைசெய்வதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். (எ-100)


## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம் 23 - 03 - 1923



மறைவு 20 - 01 - 2006

### அமரர் கந்தையா கார்த்திகேசு

எமது தந்தையின் 31ஆம் நாள் நினைவுநாள் நாளை (19-02-2006) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'குகன் இல்லம்',
கரணவாய் மத்தி,
கரவெட்டி.

கா.ராமஜெயம் (மகன்)
யா/நெ.ம.ம.வி.

(46911)(26.16.17)


## நவக்கிரியில் பரவலாக பாதீனியம் களை

யாழ்ப்பாணம், பெப்.18

நவக்கிரி, சிறுப்பிட்டி விவசாய நிலங்களில் என்றுமில்லாத அளவில் பாதீனியக்களை அடர்த்தியாக வளர்ந்து காணப்படுகிறது.

கைவிடப்பட்ட விவசாய விளை நிலங்களில் மட்டுமன்றி, வாழைத் தோட்டங்கள், பனங்காணிகள், வீதியோரங்கள் மற்றும் குறிப்பாக நிலாவரைக் கிணற்றை அண்டிய வீதியோரங்களில் இந்தச் செடிகள் மிகவும் அடர்த்தியாகப் படர்ந்து காணப்படுகின்றன. (எ-69)

## சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

கிணற்றடியில் தண்ணீர்த் தொட்டியில் வழுக்கி விழுந்து உயிரிழந்தார் எனத் தெரிவித்து ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாயில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நடராசா சுகுமார் (வயது 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனை, மரணவிசாரணையின் பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (3-13-15)

## திறன் விருத்திச் செயலமர்வு

தென்மராட்சி, பெப்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் யுனிசெப் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தரம் 10 மாணவர்களுக்கான கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் இழந்த கல்வியை மீட்டல் தொடர்பான திறன் விருத்திச் செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

இத்திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியரை மாணவர் வரவு விவரம், நடத்தப்பட்ட வகுப்புகள் பற்றிய நாளாந்த அறிக்கை, பயிற்சிகள் திருத்தப்பட்ட செயல்' நூல்கள், பயிற்சி, செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை விவரம் ஆகியவற்றைக் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (3-117)




உ
சிவமயம்
ஸ்ரீ ராமஜெயம்

## அந்தியேட்டி அழைப்பு

அன்புடையீர்!

பார்த்திப வருடம் 04-01-2006 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

### அமரர் நடராஜா பாலேந்திரன்

(உரிமையாளர் Atlas)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (45ஆம் நாள்) நாளை (19-02-2006 ) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை, பம்பலப்பிட்டி சென். லோறன்ஸ் வீதி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பத்தினருடன் வருகை தந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன், அழைக்கின்றோம்.

இல:-97/14, காலி வீதி,
தெஹிவளை.

மனைவி, பிள்ளைகள்,
மற்றும் குடும்பத்தினர்.

(சி/47926)(26.16.17)

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

## Computer Hardware Engineering Course

உள்நாட்டு. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற

உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% பயிற்சி நெறி

◇Assembling ◇Upgrading ◇Troubleshooting ◇Fault Finding ◇Repairing ◇Servicing ◇Software Installation ◇Configuring ◇Introduction to Networking

**Course Contents**

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- Internet & e-mail
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம் (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software, Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

Course Fee :- 2000/=
Free Study Pack & Drivers CD
வகுப்புக்கள் ஆரம்பம்:-
20/02/2006 :- 08.30-04.00

**Hard ware பயிற்சி**

- ❖கணனிப் பாகங்களை இனம்காணும் முறை
- ❖Assembling
- ❖BIOS Configurations (முறைப்படுத்தல்)
- ❖Hard Disk முறைப்படுத்தல் (Partition & Formatting)
- ❖Network தொடர்பான அறிமுகம்
- ❖Troubule Shooting / Maintenance.

**Software பயிற்சி**

- ❖Operating System நிறுவும் முறை (Windows 98 / Windows XP)
- ❖Software Install செய்யும் முறை
- ❖Driver Installation செய்யும் முறை (Sound Card,Modam,VGA,TV Card,Printer)
- ❖Troubule Shooting (File updating, Copying)

**நன்மைகள்**

- ❖ பாடநெறியின் இறுதியில் கம்யூட்டர் காட்வெயார் சம்பந்தமான பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- ❖ PI முதல் P4 வரையிலான கம்யூட்டர்களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- ❖ எமது ஆய்வுகூடத்தில் கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirampiyadi lane , Jaffna.
Telephone :- 021-2228250 , 0777-222422

19ம் திகதி ஏனைய அனைத்து கணனிக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.



மாகாண சபைகள் - உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாண சபை
சு... ...பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்டம்
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ." கடன் இல. 0006 - SRI (SF)
யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் இல:03

1.சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்ட (TAARP) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ.அ.வ.") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தத்திற்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இலங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/TAARP/CD/01 package II | வடமராட்சியில் கெருடாவில் கிராம அபிவிருத்திச் செயலகம் மீளமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 30,200/- |

3.தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர் அலுவலகம், NECORD , கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021 -2223625, தொலைநகல்: 021-2225163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk

4.ஒப்பந்த ஆவணங்கள் மாசி மாதம் 17ஆம் திகதி முதல் பங்குனி மாதம்03ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணிவரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

5.மேற்படி வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் 'தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்' இற்கு பங்குனி மாதம் 10ஆம் திகதி பி.ப.3 மணிக்கு முன்பாகக்கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

6.ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கானகூட்டமொன்று கச்சேரியில் பங்குனி மாதம் 2ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

(சி/47917)(26.16.17)

க.கணேஸ்,
தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

நான்முகன் படைப்பில் 28 - 06 - 1927



அறுமுகன் அழைப்பில் 19 - 01 - 2006

### அமரர் சின்னத்தம்பி கந்தையா

[மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதா பரிபாலன சபைத் தலைவர், மீசாலை கிழக்கு, திருப்புகழ் மண்டப இயக்குநர் சபைத் தலைவர்.]

கடந்த 18-01-2006 இல் இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (18-02-2006)சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'பழமுதிர்ச்சோலை'
திருப்புகழ் மண்டப வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

குடும்பத்தினர்.

(46912)(26.16.17)



## 31ஆம் நாள் நினைவலைகள்

தாயின் மடியில் 10 - 03 - 1918



மண்ணின் மடியில் 19 - 01 - 2006

### அமரர் தம்பையா வடிவேலு

இன்று (18-02-2006) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள 31ஆம் நாள் நினைவஞ்சலியிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ள மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செபஸ்ரியார் கோயிலடி,
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

(46921)(26.16.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முகம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் முகாமைத்துவ கற்கையியல் வணிக பீடாதிபதி மாணிக்கம் நடராஜசுந்தரம் முகாமைக் கற்கையியல் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டிருக்கிறார்.

இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பேராசிரியர் நடராஜசுந்தரம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் விளையட்டுத் துறையில் பல சாதனைகளை நிலைநாட்டியவர். கல்வி கற்கும் காலங்களில் இலங்கையின் அதி சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர். தற்போது 'துடுப்பாட்டம்' பற்றிய நூல் ஒன்றை முதன் முதலில் தமிழில் ஆக்கியுள்ளார். (எ-70)

✱ ✱ ✱



தண்ணீரூற்று முள்ளிவளையைச் சேர்ந்த ச.வே.பாலசிங்கம் கடந்த 3ஆம் திகதி வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் ஆகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவுக் கிளையின் முன்னாள் தலைவரும் முள்ளியவளை பாரதி இலக்கிய மன்றம், முள்ளியவளை கல்யாண வேலவர் ஆலய பரிபாலனசபை ஆகியவற்றின் தலைவரும் வித்தியானந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான இவர் முல்லைத்தீவு மாவட்ட விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் முல்லைத்தீவு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமாகவும் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில விஞ்ஞான மாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். (எ-353)

✱ ✱ ✱



முல்லைத்தீவு, ஆலங்குளம் தமிழ் வித்தியாலய அதிபராகக் கடந்த 8ஆண்டுகளாகப் பணியாற்றிய க.இராசதுரை கடந்த 20.05.2005 அன்று சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். சரசாலை மத்தி, சாவகச்சேரியைச் சொந்த இடமாகக்கொண்ட இவர் 35 வருட காலம் ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றியுள்ளார். (எ-322)

✱ ✱ ✱



ஆவர்ங்காலைச் சேர்ந்த செல்லர் தவராசசிங்கம் அண்மையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் ஆவரங்கால் மேற்கு விவேகானந்தா சனசமூக நிலையம், இந்து இளைஞர் மன்றம், இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம், விவேகானந்தா முன்பள்ளி ஆகியவற்றின் தலைவரும் விவசாயிகள் சம்மேளன உறுப்பினருமாவார். ஆவரங்கால் லிங்கன் சனசமூக நிலைய முன்னோடிகளில் ஒருவரான இவர் சிறந்த சமூக சேவையாளருமாவார். (எ-173)

✱ ✱ ✱



நெடுந்தீவு மேற்கு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த கோ.யோகேஸ்வரன் நெடுந்தீவு பிரதம தபாலக தபாலதிபராக 16.01.2006 இல் இருந்து நியமனம் பெற்றுள்ளார்.

நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலயம், சைவப் பிரகாச வித்தியாலயம், யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் நெடுந்தீவு மேற்கு உப தபாலகத்தில் உதவித் தபாலதிபராகக் கடமையாற்றியிருந்தார். (எ)

✱ ✱ ✱



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் நடராசா குணசீலன் 35 வருட ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரியான இவர் 1970ஆம் ஆண்டு வவுனியா புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றியிருந்தார்.

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினராகவும் தொண்டைமானாறு வெளிக்கள நிலைய நிர்வாக உறுப்பினராகவும் வடமராட்சி ஆசிரியர் சங்கச் செயலாளராகவும் விளங்கியதுடன், பொது அமைப்புகள் மூலம் மக்களுக்குப் பணியாற்றியுள்ளார். (எ-173)

# உலக வங்கியின் வீடமைப்புக் கிராமங்களுக்கு குடிதண்ணீர், மின்சார வசதிகளும் கிடைக்கும்

## திட்டப் பணிப்பாளர் பத்மநாதன் அறிவிப்பு

திருகோணமலை, பெப் 18

உலக வங்கியின் அனுசரணையுடன் வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டத்தின் (நேர்ப்) கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்படும் கிராமங்களுக்கு குடிதண்ணீர், மின்சாரம் வழங்கவும் அங்குள்ள வீதிகளைப் புனரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு தெரிவித்தார் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் செ.பத்மநாதன்.

இது விடயமாக மேற்படி திட்டத்தின் தகவல், கல்வித் தொடர்பாடல் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

கடந்த கால யுத்தத்தினால் அழிவுற்ற வீடுகளை, வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் மீள நிர்மாணித்த கிராமங்களுக்கு குடிதண்ணீர், வீதி, மின்சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்தகைய கிராமங்களில் மீளமைக்கப்படவேண்டிய உட்கட்டுமான வசதிகள் பற்றிய விவரங்கள், அவற்றுக்கான நிதிமூலகங்களையும் பெற்றுக்கொள்ளும் உபாயங்கள் பற்றி தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. மக்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்கும் காலம் வெகுதூரத்தில் இல்லையென பணிப்பாளர் செ.பத்மநாதன் அண்மையில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின்கீழ் கடந்தகால யுத்தத்தினால் அழிவடைந்த பெருந்தொகையான வீடுகளில் 31 ஆயிரத்து 270 வீடுகளை நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதன் முதலாவது கட்டமாக 2005 ஆம் ஆண்டில் 4ஆயிரத்து 907 வீடுகள் பயனாளிகளைக்கொண்டே நிர்மாணிக்கப்பட்டன. இந்த ஆண்டில் (2006) மேலும் 14 ஆயிரம் வீடுகளை மீள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்று அதில் உள்ளது. (எ)



ஆசிரிய தினத்தை முன்னிட்டு கடந்த வருடம் அகில இலங்கை ரீதியாக ஊவா மாகாணத்தில் நடைபெற்ற தடகளப்போட்டியில் பங்குபற்றி 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்ற குரவில் தமிழ் வித்தியாலய ஆசிரியர் ம.சந்திரமோகனை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் த.அரியரத்தினம் பதங்கம் அணிவித்து பாராட்டிக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்:புதுக்குடியிருப்பு செய்தியாளர்)

# நீத்தார் நயப்புரை

## தீட்சாகுரு எனப் பாராட்டுப் பெற்றவர்



கந்தபுராண கலாசாரத்தை கட்டிக் காத்த யாழ்ப்பாணம், தென்மராட்சி வரணிப் பிரதேசத்தில் சைவக்குருக்கள் பரம்பரையில் தோன்றி வளர்ந்த பெருமைக்குரிய குருக்கள் குடியிருப்பு என்னும் பகுதியில் பொன்னையாக் குருக்கள் - இரத்தினம்மா தம்பதியினரின் ஏகபுதல்வனாக ஐயாத்துரைக் குருக்கள் 1928 இல் அவதரிதார்.

ஆரம்பக் கல்வியை சிறப்புடன் கற்று அத்துடன் சமயக் கல்வியையும் ஆர்வமுடன் கற்று இல்லற வாழ்வில் இணைந்து கொண்ட இவர் தனது 20ஆவது வயதில் சோமையாக் குருக்களால் குருப்பட்டம் பெற்றார். இவர் வரணிப் பிரதேசத்தில் மட்டுமல்ல தென்மராட்சிப் பிரதேசம், வன்னிப் பிரதேசம் வரை பூர்வ அபரக் கிரியைகளை சிறப்புற ஆற்றி, மக்கள் மனதில் தனியிடம் பெற்றவர். தனது பேச்சாலும் உபசரிப்பாலும் மக்கள் மனதில் நீங்காத இடம்பெற்றார்.

வரணி கல்வளைப் பிள்ளையார், சிட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயம் போன்ற பிரசித்த ஆலயங்களில் நைமித்திய கருமங்களை நீண்ட காலம் புரிந்து மக்களை ஆன்மீக வாழ்வில் ஈடுபடுத்தினார். மேலும் வண்ணாங்குளம் பிள்ளையார், புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயம், மண்டலாய் பிள்ளையார், நிச்சிய வெட்டைப் பிள்ளையார் போன்ற ஆலயங்களில் விசேட உற்சவக் கிரியைகளை சிறப்புடன் நடத்தியவர்.

சைவப் பிள்ளைகள் சிவதீட்சை பெற்றிருக்க வேண்டும் என்று அடிக்கடி கூறும் இவர் பல ஆலயங்களினூடாக பல சைவ இளைஞர்களுக்கு சிவதீட்சை வழங்கியதன் மூலம் ''தீட்சாகுரு'' என்னும் சிறப்பு நாமத்தை தனதாக்கிக் கொண்டவர். கந்தபுராண கலாசாரத்தை அழியாது பேண வேண்டும் என்ற பேரார்வம் கொண்ட இவர் கரம்பான் வீரகத்தி விநாயகர் ஆலயம், கற்குழு கந்தன் ஆலயம், சேவலப்பிட்டி கந்தசாமி ஆலயம் ஆகியவற்றில் கந்த புராண படனத்தின்போது பயன் சொல்லி இன்புற்றவர்.

சைவத்தையும் தமிழையும் வளர்த்து சமயப் பணிபுரிந்த இவருக்கு இந்து கலாசார அமைச்சு 2002 யூன் மாதம் யாழ்.பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வரங்கின் போது இந்து சமயத்துக்கும் சமய மேம்பாடு மற்றும் ஆன்மீகத் துறைக்கும் ஆற்றிய பணிகளைப் பாராட்டி சேவை பாராட்டுச் சான்றிதழ் வழங்கியது. நவமித்திதியில் ஐயா அவர்கள் விநாயகப் பெருமானது பாதரவிந்தங்களை அடைந்து ஓராண்டு ஆகின்றது. அவருக்கு பெருமானின் அருள் கிடைக்குமாக.

- சி.அருணாசலம் -

## இறுதிவரை ஓயாது பணிபுரிந்த ஆசிரியர்



வீரசிங்கம் சோமசுந்தரம் 1932 இல் கோப்பாயில் பிறந்தவர். தனது இடைநிலைக் கல்வி வரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் பட்டப் படிப்பை தென்னிந்தியப் பல்கலைக்கழகங்களிலும் மேற்கொண்டார். பின்னர் இலங்கையில் பல பாடசாலைகளிலும் ஆசிரிய சேவையைச் சிறப்புறச் செய்தவர். தனது ஆசிரிய சேவையின் கூடிய பகுதியை தான் கல்வி பெற்ற கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலேயே மேற்கொண்டு தனது பிரதேசத்திற்கு அளப்பரிய சேவையைச் செய்தவர்.


ஓர் சிறந்த ஆங்கில ஆசிரியராகவும் ஆளுமை மிக்க பிரதி அதிபராகவும் செயற்பட்டவர். ஆசிரியத்துவத்திற்கு மெருகூட்டியவர். அதை ஒரு தொழிலாக அன்றி சேவையாகவே கருதியவர். இறுதிவரை அவரது வீட்டுமுன் மண்டபம் ஒரு வகுப்பறையாகவே காட்சியளித்தது. அங்கு வாங்குகளில் மாணவர் அமர்ந்திருப்பர். நடுவில் ஒரு சாய்வு நாற்காலியில் சோமா மாஸ்ரர் காம்பீரமாக அமர்ந்திருப்பார். காலை முதல் மாலைவரை மாணவர்கள் தத்தம் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளும் களமாக அந்த மண்டபம் மாறிவிடும். வில்லியம் பிளேக், வேட்ஸ்வேத் பற்றிய விமர்சனங்கள், மொழியியல் விளக்கங்கள் என்பன இடம்பெறும். நாடக விமர்சனங்களின்போது தானே அந்தப் பாத்திரமாக மாறிவிடுவதுண்டு. இவர் பேசும்போது ஆங்கிலமே அழகு பெறும். தனது பேச்சாற்றலாலும் கற்பித்தல் நுணுக்கங்களாலும் பல மாணவர்களை ஆங்கிலம் கற்கத் தூண்டியவர். ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவர்களுக்கு சோமா மாஸ்ரர் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்தாரென்றால் அது மிகையாகாது.

தனது மொழிவித்துவம் திறமைகளையிட்டு பெருமை கொள்ளாது கடமைகளிலேயே கண்ணாகவிருந்தவர். தன்னை எச்சந்தர்ப்பத்திலும் விளம்பரப்படுத்திக்கொள்ள விரும்பாதவர். பலர் இவரது திறமைகளைத் தெரிந்திருக்கவில்லை. அதுபோலவே இறுதிவரை இவரது உறுதியான நடையும் உஷாரான பேச்சும் இவரை ஒரு நோயாளியெனக் காட்டிக் கொள்ளவில்லை.

இராஜ வீதியில் ஓர் அமைதியான சூழலில் ஒரு நிலவாக ஒளிர்ந்த சுடர் சலசலப்பேதுமின்றி நிரந்தரமாகவே அணைந்துவிட்டது. பலரை உயர்த்திவைத்த ஏணி சாய்ந்து விட்டது. சாய்ந்தாலும் மக்கள் மனங்களில் நீங்காது வாழும். நிச்சயம் சாந்தி காணும்.

- கோவை கு.நமசிவாயம் (ஆசிரியர்).

## கலையுலகில் தடம் பதித்த கலைஞர்



தனது 75 ஆவது வயதில் கடந்த மாதம் காலமான வே.க.பாலசிங்கம் அவர்கள் காலத்தால் அழியாத வகையில் கலையுலகில் தனது தடத்தை ஆழமாகப் பதித்துச் சென்றுள்ளார் எனலாம்.

பிற்காலத்தில் கவிஞர் புதுவை இரத்தினதுரையினால் கலை மகிழ்நன் எனப் பட்டம் சூட்டப்பட்ட கலைஞர் பாலசிங்கம் அரியாலையில் அண்ணாவிமார் சுற்றிவர வாழ்ந்த ஒரு கலையம்சம் மிகுந்த சூழலில் 1931ஆம் ஆண்டு பிறந்தார். தனது ஏழு வயதிலேயே அரியாலையூர் அண்ணாவியார் நீ.செல்லக்கண்டுவின் நெறியாள்கையில் 'பாமா விஜயம்' என்னும் நாடகத்தில் சிறுவனாக நடித்தார்.

சிறுவயதிலிருந்தே அரியாலையூர் கவிஞர் ஐயாத்துரை, 'சந்திரமதி' வே.க.இரத்தினம் ஆகியோருடன் சேர்ந்து பல நாடகங்களில் நடித்து வந்திருக்கின்றார். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது திருகோணமலையில் ஒரு மாதமளவில் தங்கியிருந்து ஆறு நாடகங்களை இவர்கள் மேடையேற்றியிருக்கின்றார்கள். ஐம்பதுகளில் மதன சேனா, அசோக்குமார், கோவலன் கண்ணகி, ஆரியமாலா, அல்லி அருச்சுனா போன்ற நாடகங்களில் பெண் வேடந்தாங்கியே நடித்துப் பேர் பெற்றிருக்கின்றார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் 'சகோதர பாசம்' என்ற நாடகத்தில் கதாநாயகனாக நடித்ததிலிருந்து ஆண் வேடந்தாங்கி நடிக்கத் தொடங்கினார்.

ஆறுபதுகளில் இவரது புகுந்த இடமான பொலிகண்டியில் பாரதி நாடக மன்றத்தின் சார்பில் பல நாடகங்களைத் தயாரித்துத் தானும் நடித்தார். ஸ்ரீவள்ளி, சத்தியவான் சாவித்திரி, பதவி மோகம், பூதத்தம்பி, வாலி வதை, ராஜதேசிங்கு ஆகிய நாடகங்கள் கலைஞர் பாலசிங்கம் அவர்களுக்குப் பெரும் புகழைத் தேடிக் கொடுத்தன. முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனைக் கிராமத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் அங்குள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் பங்கு பெறச் செய்து கண்ணன் தூது, ராஜதேசிங்கு போன்ற நாடகங்களை மேடையேற்றினார். ஸ்ரீவள்ளி, பதவி மோகம், அரிச்சந்திரா ஆகிய நாடகங்களைத் திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டங்களில் திரியாய், புல்மோட்டை, கொக்குத்தொடுவாய், முள்ளியவளை ஆகிய கிராமங்களில் மேடையேற்றி புகழ் பெற்றார்.

கலாபூஷணம் பாலசிங்கம் அவர்கள் வில்லனாக நடித்தபோது இவரது நடிப்பில் தங்களை மறந்து முன் வரிசையில் இருந்தவர்கள் 'முளியன் வாறன், கள்ளன் வாறன், எளிய ராஸ்கல்' என்று கூறி மண்ணால் அள்ளித் திட்டிய சந்தர்ப்பங்கள் இவரது நடிப்புக்குக் கிடைத்த அங்கீகாரம் எனலாம். வயதான காலத்தில் பூதத்தம்பி நாடகத்தில் இளம் வயதுப் பாத்திரம் ஏற்று வில்லனாக நடித்த போது யாரோ ஓர் இளைஞன் நடிக்கின்றான் என நினைத்து ரசிகர் கூட்டம் 'நாடகமும் முடியப்போகுது பாலசிங்கம் மாஸ்ரரும் நடிக்கிறார்கள் எண்டாங்கள். ஆளை இன்னும் காணவில்லை'' என ஆளைத் தேடிய சந்தர்ப்பங்களும் உண்டு. இவரது நாடக திறமைக்கு இவரது குரல் வளமும் வலுவூட்டியது எனலாம். சிறந்த பாடகர் மட்டு மல்லாது சிறந்த ஓவியராகவும் திகழ்ந்தார். பாடல்களைத் தானே யாத்து இசையமைப்பதிலும் தனது திறமையைக் காட்டினார். இவரது திறமைகளைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் சங்கீத பூஷணம் சி.பத்மலிங்கம் அவர்களும் வெகுவாகப் பாராட்டி உள்ளனர்.

தனது இறுதிக்காலம்வரை ஓயாது கலைத்துறைக்குப் பங்களிப்புச் செய்த கலைமகிழ்நன் வே.க.பாலசிங்கம் அவர்கள் இன்றில்லாவிட்டாலும் எளிதில் மறந்து விட முடியாத ஒரு கலைஞனாக என்றும் இம்மண்ணில் நினைவில் நிற்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

- கொற்றை பி.கிருஷ்ணானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்துகள்




வாய்க்கால் வைரவர் துணைகொண்டு
**சுரேஸ்குமார் - சுபத்திரா**
தம்பதியரின் செல்வப் புதல்வி **வானுஜா**
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (18.02.2006) சனிக்கிழமை
வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.
அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அம்மம்மா,
மாமாமார்கள், அத்தை அப்பம்மா,
பெரியப்பாமார்கள், பெரியம்மாமார்கள்,
சித்தப்பாமார், தம்பி, தங்கச்சிமார்,
அண்ணன்மார் அனைவரும் வானுஜாவை
சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றனர்.

**ப. றஜனிகாந்**
[மாமா- பிரான்ஸ்]
கோயிற்சந்தை,துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

(46702)

## புதுமணத் தம்பதிகளை வரவேற்கும் நிகழ்வு



கடந்த மாதம்
வாழ்க்கையில் இணைந்த,
மறைந்த தவில் மேதை
என்.ஆர். சின்னராசாவின்
மகனான
சுதாகரன்– சுகந்தினி
தம்பதியினரை வரவேற்கும்
நிகழ்வு இணுவிலில் இடம்
பெறவிருக்கின்றது.

காலம்: 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2 மணி
இடம்: பரராஜசேகரப்பிள்ளையார் கோயில்
மண்டபம், இணுவில்.

இந்நிகழ்வில் குடும்ப சமேதராகக் கலந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு
அன்புடன் வேண்டுகிறோம்.

வரவேற்பு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள்.
ஊர்மக்களும், நாதசுர, தவில்
கலைஞர்களும்.

குறிப்பு: இந்நிகழ்வில் பஞ்சமூர்த்தி குமரேசனின் கர்நாடக
இசைக்கச்சேரி இடம்பெறும்.

(46892)

## சொல்லில் அடங்காத சோகமிகு 11ஆம் ஆண்டு



மலர்வு
23-10-1975

மறைவு
18-02-1995

செல்வன்
**ச.மணிவதனன்**
[க.பொ.த. உ/த உயிரியல் பிரிவு] யாழ்.
மத்திய கல்லூரி 94 ஆம் ஆண்டு
[கிரிக்கற் அணித் தலைவன்]



மலர்வு
23-04-1977

மறைவு
01-04-1995

செல்வி
**ச.ஜெயச்சித்திரா**
[யாழ். க.ம. மகாவித்தியாலய க.பொ.த.
O/L மாணவி]

உங்கள் பிறப்பால் பெருமை கொண்ட பெற்றோரும் சோதரரும் உங்கள் மறைவால் பதினொரு ஆண்டுகளாய் பெருந்தணலில் புழுவானார்

தங்கையை தன் உயிராய் எண்ணி தரணியில் வாழ்ந்த தங்கமகன், தங்கை உயிரை எண்ணி தன் உயிரை வைத்திருந்தான். அண்ணன் வளர்த்த உயிர் அவ னுடனே சென்றதம்மா! தங்கையின் கொடுநோய் கண்டு அவள் தரணியில் வாழ மாட்டாள் எனக்கண்டு மண்ணுலகில் எமைத்தவிக்க விட்டு நீங்கள் இருவரும் விண் ணுலகம் சென்றீரோ? கண்மணிகாள் மத்தியின் மணிவிளக்கே மணிவதனன் மங்காத குலவிளக்கே ஜெயச்சித்திரா, எம் செல்வங்களே! நீங்கள் எமைப் பிரிந்த 11 ஆண்டு களில் தந்தை நிலை தாளாத சோகத்தில், தாயாரோ மீளாத கண்ணீரில் , சோதரர்களோ நீங்கள் இன்றி சோகத்தின் விழிம்பில் விளையாட்டுத் துறையிலே தலை சிறந்த வீர னாய், வீராங்கனையாய் நீங்கள் பெற்றுத்தந்த வெற்றிகள் என்றும் உங்கள் பெயர் சொல்லும்.

இவர்களது ஞாபகார்த்தமாக இன்று மாலை ஒரு மணிக்கு யாழ். வை. எம்.சி.ஏ மண்டபத்தில் கலைப்போட்டிகள், பாட்டுக்குப்பாட்டு, தேனிசை மழை, ஜோன் சனின் பிறேக் நடனம் அத்துடன் பரிசளிப்பு வைபவமும் இடம்பெறும்.

கண்மணிகளின் பிரிவால் கண்ணீர் சொரியும்.. (46861)

**மணிக்குரல்குடும்பம்**

## தென்மராட்சியில் மாதாந்த உதவிப்பணம்

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பொது சன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர் காச நோய், புற்றுநோய், தொழுநோய் ஆகியவற் றால் பாதிக்கப்பட் டோர் ஆகியோருக் கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவின ரால் அந்தந்த அஞ் சல் அலுவலகங் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கொடுப் பனவினை எதிர் வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள் ளது. (எ-117)

## நவாலி மாதர் சங்கம் கடனுதவி

நவாலி,பெப்.18

நவாலி தெற்கு மாதர் சங்கம் தமது அங்கத்தவர்களான 10 பேருக்கு இருபதி னாயிரம் ரூபா வீதம் கடன் வழங்கியுள் ளது. (எ-100)

**REFRESH SYSTEM**
* Computer Service/Sales * Video Convertions
* Visiting Cards Making
At your Place
Conduct: Suthumalai South, Manipay.
T.P.: 077 3253104, 077 6279671. (46452)

## தொழிற்பயிற்சி நெறிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

* **RADIO, TV AND VIDEO DECK REPAIRING**
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner, என்பன திருத்தும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 12 மாதங்கள்)
* **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
சகல இன, (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* **AIRCONDITIONING AND REFRIGERATION**
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 07 மாதங்கள்)
* **MOTOR CYCLE MECHANISAM**
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 06 மாதங்கள்)
* **Mobile Phone Repairing** (காலம் 01 மாதங்கள்)

மேலதிக விபரங்களுக்கு ஆரம்பம்:-18-21.02.2005

**JAFFNA TECHNICAL INSTITUTE**
இல. 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Regd. No: 15251 T.P:- 021-222 3335

# COMPUTER EXPRESS
## Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

கம்யூட்டர் எக்ஸ்பிரசின் இரண்டாம் ஆண்டு நிறைவையொட்டி கணக்கியல் துறையில் ஆர்வமுள்ளோரிற்கான ஒருவாரகால முழுநேர கணனிக் கணக்கியல் கற்கைநெறி.

## Diploma in Computerized Accounting
**Accpac+Quick Books Pro+Tally**
ஆகிய முன்னணி *Accounting Software* அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

**Course Contents**
- Introduction to Computer
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting
- Fore Casting
- Business Planing
- Internet & e-mail

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,N.G.O) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும்,பல்கலைக்கழக மாணவர்கள்,உயர்தொழினுட்பக் கல்லூரி மாணவர்கள், ஏனைய கணக்கியல்துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவருக்கும்

Course Fee:- ரூபா 3500

நன்மைகள்:-
- வெளிநாட்டு,உள்நாட்டு வேலைவாய்ப்புக்களை இலகுவாகப் பெறலாம்.
- 100% தொழில்சார்ந்த பயிற்சிநெறி
- தகமை, அனுபவம் வாய்ந்த போதனாசிரியர்கள்.
- Free Study Pack
- 100% செய்முறைப் பயிற்சிகளிற்கான உத்தரவாதம்
- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படுவதால் கணனி தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.

கொழும்பிலிருந்து வருகைதரும் விரிவுரையாளரினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

வகுப்புக்கள் ஆரம்பம் :-
**20/02/2006**

**Computerized Accounting**
3 மாதகால கற்கைநெறி 26/02/2006 அன்று ஆரம்பிக்கப்படும்.

ஏனைய அ... புதிய பிரிவுகள் 19ம் திகதி ஆரம்பமாகின்றது.

## 31ஆம் நாள் நினைவாக...

அன்னை மடியில்
15 - 06 - 1923



ஆண்டவன் அடியில்
21 - 01 - 2006

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் புங்குடுதீவை வசிப்பிடமாகவும்
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழியில் வசித்தவருமாகிய

### அமரர் ஆறுமுகம் அமராவதி

பாசத்தின் இலக்கணமாய் வாழ்ந்த
ஆருயிர் தாயே! அம்மாவே!
நல்வழி காட்டிய எங்கள் அன்பின்
திருவுருவே! பண்பின் சிகரமே!
பெருந்துயர் வந்து ஒரு மாதமானதம்மா!
பல மாதங்களானாலும் உங்கள்
நினைவு எம்மை விட்டு அகலாதம்மா!
தங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோமம்மா!

எங்கள் இதய தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் தொலைபேசி, தந்தி, தபால், பத்திரிகை வாயிலாகவும் நேரிலும் துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு,

2006-02-20ஆம் திகதி திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)*

ஆ.சாந்தலிங்கம்,
12/3, சந்தானமாத லேன்,
பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.
T.P: 4590488.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*(46898)(22-16-42)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள இனத்துக்கே உரிய தேசியவாதவெறி ஜனாதிபதி மஹிந்தவை ஆட்கொண்டுவிட்டதா?

## கேள்வி எழுப்புகின்றது பொது அமைப்புகளின் ஒன்றியம்

யாழ்ப்பாணம், பெப்.18

சிங்கள இனத்துக்கே உரிய தேசியவாத வெறி ஜனாதிபதி மஹிந்தவை ஆட்கொண்டு விட்டதா? இதனையே அவர் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வி புலப்படுத்தி நிற்கின்றது.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். மாவட்டபொது அமைப்புகளின் ஒன்றியம்.

இதுவிடயமாக மேற்படி ஒன்றியம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ், சிங்கள தேசங்களின் முரண்பாடுகளுக்கு திருப்புமுனையாக விளங்கும் இந்த வரலாற்றுக் கட்டத்தில் தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை முற்றிலும் புறந்தள்ளி வெறுக்கத்தக்க கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

தமிழ் மக்களது தாயகத்தின் இருப்பை நிராகரிப்பதுடன், ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்றும் அவர் வெளியிட்ட கருத் துகள் ஸ்ரீலங்கா அரசானது நிரந்தர சமாதனத்திற்கான பாதையை அது நிரந்தரமாக மூடிவிடுவதற்கான முன் தயாரிப்புகளில் கூடிய அக்கறைகொண்டுள்ளது என்பதையே தெளிவாக்கிவிட்டது.

சர்வதேச ரீதியாக இன முரண்பாடுகளுக்கான தீர்வாக சமஷ்டி அரசமைப்பு முறையே முன்வைக்கப்படுகிறது. விடுதலைப் புலிகளாலும் ஸ்ரீலங்கா அரசினாலும் கூட்டாக வெளியிடப்பட்ட ஒஸ்லோ அறிக்கையில் சமஷ்டி அரசமைப்புக் குறித்துக் கூறப்பட்டதை வலுவற்றதாக்க மஹிந்த முயலுகின்றாரா? வெறும் அதிகாரப் பகிர்வுக்காகத் தமிழ் மக்கள் பெரும் தியாகங்களுடன் போராடவில்லை. இதனை நீண்டகால அரசியல் பின்னணி கொண்ட மஹிந்த புரிந்துகொள்ள வேண்டும். சிங்களப் பெருந்தேசியவாதவெறி அவரை ஆட்கொண்டுள்ளதை இப்போது எவராலும் மறக்கமுடியாது.

✱ வரலாற்று ரீதியாக தமிழ் மக்கள் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் - வசித்துவந்தமை.

✱ சிங்கள இன வெறியாளர்கள் தமிழின அழிப்பினைப் பெருமளவில் மேற்கொண்ட போது தென்னிலங்கைத் தமிழர்கள் இந்தத் தாயகப் பிரதேசத்திற்கே அடைக்கலம் தேடி வந்தமை.

✱ அரசியல், பொருண்மிய, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கில் தமிழ்த்தேசிய இனம் தளமாகக் கொண்டமை.

மேற்கூறியவை தாயகக் கோட்பாட்டினைத் தெளிவாக்குகின்றன.

போர் நிறுத்த உடன்படிக்கையை பலமிழக்கச் செய்வதுதான் மஹிந்தவின் நோக்கமா? என்ற நியாயமான சந்தேகம் தமிழ் மக்களிடம் எழுந்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையைப் முழுமையாக நிறைவேற்றுவதற்கான வழிவகைகளை முன்னெடுப்பதற்கான பேச்சுக்கான ஏற்பாடுகளை சர்வதேச சமூகம் கரிசனையுடன் மேற்கொள்ளும்போது பேச்சுகளை முறிப்பதற்காக மஹிந்த கக்குகின்ற நச்சுக் கருத்துகளை தமிழ் மக்களது பொது அமைப்புகளின் ஒன்றியமாகிய நாம் கண்டிக்கிறோம்.

அத்துடன், அரசு என்னும் நிறுவன மயப்பட்டுள்ள சிங்களப் பேரினவாதம் இன்றைய கட்டத்திலும் தன் இனவெறியைக் கைவிடத் தயாரில்லை என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளும் என நாம் எதிர்பார்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

## உணவுப் பரிசோதகர் சுவைத்த 'றோளில்' செம்மண்கட்டி

குருநகர்,பெப்.18

யாழ். நகரில் இயங்கி வரும் உணவகங்களில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்கள் படுமோசமான நிலையில் உள்ளன என யாழ்.சுகாதாரத் திணைக்களப் பகுதியினரும் பொது மக்களும் தெரிவித்துள்ளனர்.

யாழ். பண்ணையில் அமைந்துள்ள யாழ்.பிராந்திய பயிற்சி நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற மருந்துக்கலவையாளர் பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் வழங்கப்பட்ட உணவில் செம்மண் கட்டி ஒன்று காணப்பட்டதாக நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

யாழ். நகரில் உள்ள உணவகம் ஒன்றில் தயாரிக்கப்பட்ட மரக்கறி 'றோள்கள்' யாழ். சுகாதாரப் பகுதியினரால் விலைக்கு வாங்கப்பட்டு பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் வருகைதந்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்தச் செம்மண் கட்டி காணப்பட்ட 'றோள்' திணைக்களத்தின் உணவு மருந்துப் பரிசோதகராலேயே சுவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரியவந்தது. (எ-51)



வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட புலோலி கொத்தணி முன்பள்ளிகளின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. விழாவில் பருத்தித்துறைப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி ரவீந்திரன் தவலட்சுமிதேவி மங்கள விளக்கேற்றிவைப்பதைப் படத்தில் காணலாம். பிரதம விருந்தினரான முன்பள்ளி ஆசிரியர் சங்க ஆலோசகர் எஸ்.திருச்செல்வம் மற்றும் சிறப்பு விருந்தினர்களும் படத்தில் உள்ளனர். (படம்: கரவெட்டிச் செய்தியாளர்)

# மருதங்கேணி வைத்தியசாலையை தரம் உயர்த்துமாறு கோரிக்கை

செம்பியன்பாற்று, பெப்.18

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையை மாவட்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தித்தருமாறு மேற்படி வைத்தியசாலையின் வளமேம்பாட்டு பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்கில் உள்ள ஒரே ஒரு வைத்தியசாலையான மருதங்கேணி வைத்தியசாலை 5 ஆயிரம் மக்களுக்கு வைத்திய சேவையை வழங்கி வருகிறது. ஒரே ஒரு வைத்திய அதிகாரியுடன் இந்த வைத்திசாலை இயங்கி வருகிறது.

இப்பகுதி மக்கள் மருத்துவச் சேவையைப் பெறுவதானால் கிளிநொச்சிக்கு அல்லது யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது. அதிலும் குறிப்பாக இக்கட்டான காலகட்டத்தில் இந்த வைத்திய சாலைகளுக்குப் போக்குவரத்துச் செய்வது என்பது பெரும் பிரச்சினையாகவுள்ளது.

எனவே, மேற்படி வைத்தியசாலையை தரம் உயர்த்தி சகல பிரிவுகளையும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று - வளமேம்பாட்டுப் பேரவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ-36)




# மண்டைதீவில் எல்லைப் பூவரசு மரங்கள் கடற்படையினரால் அழிக்கப்படுவதாகப் புகார்

மண்டைதீவு,பெப்.18

மண்டைதீவில் காணிகளின் எல்லைகளில் நடுகை செய்யப்பட்டிருந்த பூவரசு மரங்களும், ஆங்காங்கே வளவுகளில் நிற்கின்ற பூவரசு மரங்களும் தறிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவில் நிலை கொண்டுள்ள கடற்படையினரே இவற்றை தறித்து வருகின்றனர். எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக மண்டைதீவு உப்புவெளிப்பகுதியில் உள்ள வயல் நிலங்களின் எல்லைகளாக பல வருடங்களுக்கு முன் நடுகை செய்யப்பட்ட பூவரசு மரங்களே இவ்வாறு அதிகமாகத் தறிக்கப்பட்டு காவலரண்கள் நிறுவும் பொருட்டு எடுத்துச் செல்லப்படுகின்றன என்றும் - கூறப்பட்டது.

இதனைவிட மண்டைதீவு அம்மன் கோயில் வீதியோரமாகவும் மாட்டு ஒழுங்கைப் பகுதியிலும் உள்ள எல்லைக் கதிகால்கள் தறிக்கப்பட்டு அவற்றின் கிளைகள், கொப்புகள் அகற்றப்பட்டு அப்பகுதிகளில் போடப்பட்டுள்ளதை காணக்கூடியதாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1997ஆம் 1998 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியிலும் இவ்வாறு மண்டைதீவு பிரதான வீதியில் உள்ள எல்லைப் பூவரசுகளை முற்றாகத் தறித்து அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-88)

## ஆண்டுவிழாவும் பொதுக்கூட்டமும்

யாழ்ப்பாணம்,பெப்.18

செவிப்புலன் வலுவுற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் (றூட்) 24 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக் கூட்டமும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கலட்டி சீனியர் ஒழுங்கையிலுள்ள நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசஅதிபர் கே. கணேஸ் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினர்களாக யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம், நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொள்வர். (எ-188-204)

# சுகாதார சேவை நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டில் தொலைத்தொடர்பு வசதி

## பிரதி மாகாணப் பணிப்பாளர் தகவல்

குருநகர்,பெப்.18

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கி வரும் பன்னிரண்டு நிறுவனங்களுக்கு கடந்த வருடம் தொலைத்தொடர்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ்.பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர்டாக்டர்ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை, நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை, அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை, நயினாதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை.

வட்டுக்கோட்டை கிராமிய வைத்தியசாலை, பண்ட்த்தரிப்பு கிராமிய வைத்தியசாலை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ்.பண்ணை மருந்துக் களஞ்சியம் மற்றும் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பிராந்திய தொற்றுநோய் தடுப்பு வைத்திய அதிகாரி பிரிவு ஆகியவைகளுக்கே தொலைத்தொடர்பு சேவை வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை, சங்கானை சுற்றயல் கூறு வைத்தியசாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலை, நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றுக்கு மின்பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டுள்ளன என்றும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-51)

# பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழு

செம்பியன்பற்று,பெப்.18

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவுக்கான பாவனையாளர் ஒருங்கிணைப்புக் குழுக்களை தெரிவு செய்வதற்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கிராம சேவை அலுவலர் பிரிவு ரீதியாக இரண்டுபேர் தெரிவு செய்யப்பட்டு குழுக்கள் அமைக்கப்படும்.

பாவனையாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றிறுக்கான தீர்வுகளை மேற்கொள்ள வசதியாக இந்தக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. (எ-36)



வடமராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் க.ஜெயானந்தம் இளைப்பாறியதையிட்டு அவரின் சேவை நலனைப் பாராட்டி அண்மையில் யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலைச் சமூகம் பாராட்டு விழா ஒன்றை நடத்தியது. பிரிவுபசார விழாவில் பாடசாலை நலன்புரிச் சங்கத் தலைவர் சு.மகாதேவா உரையாற்றுவதையும், விழா நாயகர், பாடசாலை அதிபர் பொ.சிவராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய நிர்மாண அபிவிருத்தி அமைச்சு
## வடக்கு - கிழக்கு மாகாண சபை

*வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் II (நிகோட் II )*
*ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது*
*"ஆ.அ.வ." கடன் இல.2168 - SRI(SF)*
*"ஆ.அ.வ." நன்கொடை இல.0007 - SRI(SF)*

# யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான
# கேள்வி அறிவித்தல் இல.03

1. வடக்கு - கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD II) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ஆ. அ. வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைந் தற்போது கோருகிறார்.

| இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/NECORD-II / AG/01 | கரவெட்டியில் கமநலசேவை நிலையம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 65,900 |
| 02 | JF/NECORD-II / RD/01-Package-I | வேலணையில் அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி புனரமைத்தல் - தொகுதி I | M7 (பெருந்தெருக்கள்) | 33,000 |
| 03 | JF/NECORD-II / RD/01-Package-II | வேலணையில் அல்லைப்பிட்டி மண்கும்பான் வீதி புனரமைத்தல் - தொகுதி II | M7 (பெருந்தெருக்கள்) | 40,000 |
| 04 | JF/NECORD-II / RD/05-Package-I | யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமிய வீதிகளைப் புனரமைத்தல் - தொகுதி I | M7 (பெருந்தெருக்கள்) | 29,500 |
| 05 | JF/NECORD-II / RD/05-Package-II | யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமிய வீதிகளைப் புனரமைத்தல் - தொகுதி II | M7 (பெருந்தெருக்கள்) | 26,700 |
| 06 | JF/NECORD-II / RD/05-Package-III | யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமிய வீதிகளைப் புனரமைத்தல் - தொகுதி III | M7 (பெருந்தெருக்கள்) | 29,000 |
| 07 | JF/NECORD-II / LS/01 | யாழ்ப்பாணத்தில் மிருக வைத்திய அலுவலகம் அமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 44,800 |
| 08 | JF/NECORD-II / ID/03 | யாழ்.மாவட்ட செயலகத்தில் வாகன நிறுத்துமிடம் மீளமைத்தல் | M9 (கட்டடங்கள்) | 6,500 |
| 09 | JF/NECORD-II / HS/03 | சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி விடுதி மீளமைத்தல் | M5 (கட்டடங்கள்) | 126,600 |
| 10 | JF/NECORD-II / ED/08 | நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 110'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல் | M6 (கட்டடங்கள்) | 74,500 |
| 11 | JF/NECORD-II / ED/09 | அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 110'x 25' அளவுடைய இருமாடி வகுப்பறைக் கட்டடம் மீளமைத்தல். | M6 (கட்டடங்கள்) | 74,500 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப் பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் M7 இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.
   III) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங் கப்படவேண்டும்.
   IV) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலை யைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.
   V) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
   VI) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப் பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில்* பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 021 222 3625, தொலைநகல்: 021 222 5163, மின்னஞ்சல்: necordjf@sltnet.lk
6. ஒப்பந்த ஆவணங்கள் மாசிமாதம் 17ஆம் திகதி முதல்பங்குனி மாதம் 03ஆம் திகதி வரை முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் 3 மணி வரை வேலைநாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் *"தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்"* இற்கு பங்குனி மாதம் 10ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் பங்குனி மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஸ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச் சபை,**
**அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி/47818)(42-15-45)

## ஆறு மருத்துவமனைகள் கடந்த ஆண்டு புனரமைப்பு

குருநகர்,பெப்.18

யாழ்.மாவட்டத்திலுள்ள ஆறு வைத்தியசாலைகள் கடந்த வருடம் 'நீர்ப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை 14.24 மில்லியன் ரூபா செலவிலும் பண்ணையில் அமைக்கப்பட்ட மார்புநோய் சிகிச்சை நிலையம் 18.7 மில்லியன் ரூபா செலவிலும் பிராந்திய மருந்துக் களஞ்சியம் (பண்ணை) 12.27 மில்லியன் ரூபா செலவிலும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை 6 மில்லியன் ரூபா செலவிலும் பருத்தித்துறை சுகாதார வைத்திய பணிமனை 5.71 மில்லியன் ரூபா செலவிலும் புத்தூர் மத்திய மருந்தகம் 4.2 மில்லியன் ரூபா செலவிலும் நீர்ப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டன.

இதேவேளை ஜிபிக் (JBIC) உதவித்திட்டத்தின் கீழ் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வடிகாலமைப்பு புனரமைக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-51)

IOM International Organization for Migration

# Vacancy Announcement

**Title: Field Assistants for livelihood activities (02 positions)**
**Duration: 06 Months with possibility of extension**

Under the overall supervision of Head of Office, Jaffna and direct supervision of Project Assistant (coordination) the incumbent will be responsible for the implementation of key activity in livelihood component of IOM/ARC project "Assistance for Families in Jaffna District Affected by Tsunami". The specific duties of the field assistant are as follows:

1. Responsible for the collection and management of all livelihood-related information.
2. Attend district-level livelihood coordination meetings and coordinate IOM's livelihood activities with other organizations working in the district.
3. Evaluate proposals from local organizations (CBO) for IOM livelihood support to tsunami-affected persons/communities
4. Implement and monitor IOM's livelihood assistance activities in the selected project location.
5. Monitor ongoing projects in the field and timely reporting.
6. Any other activities as assigned by the Programme Officer.

*Qualifications (Skills, Education & experience)*
1. Diploma in the field of agriculture, animal husbandry, community development, business management, training or any other relevant field.
2. Excellent knowledge in Tamil, English. Knowledge in Sinhala language is an added qualification.
3. Basic knowledge in computer literacy.
4. Ability to conduct training programmes for beneficiaries.
5. Minimum of two years experience related to livelihood programmes, income generation projects or micro finance

**Title: Project Assistant for water, Sanitation and Transitional Shelter**
**Duration: 06 Months with possibility of extension**

The main goal of this position is to provide close supervision and material management support to the water, sanitation (WATSAN) and transitional shelter construction of ARC project in respective sites deal with day today operations of the project in his/her area of responsibility. He/she will report to the Construction Engineer/Head of Office, Jaffna and liaise with procurement and logistics counterpart in the sub office.

*Primary responsibilities:*
1. Asssist construction engineer in the management of construction works
2. Record and report all site issues related to the construction works including quality and quantity of construction materials
3. Submit field progress report to his/her supervisor on weekly basis

*Qualifications & Skills required:*
1. Diploma in civil engineering or equivalent qualification with experience in the field of water, shelter or sanitary
2. Relevant experience in construction works
3. Ability to understand and interpret engineering drawings and bill of quantities
4. Ability to work in tsunami affected area
5. Spoken & written fluency in English & Tamil. Knowledge in Sinhala language is an added qualification.
6. Management skills and liaison with GOSL as well as private partners are required

**Title: Project Assistant**

Under the overall supervision of National Programme Officer/Field Office Coordinator and direct supervision of Head of Office, Jaffna, the incumbent will be responsible for the implementation of key activity components of the IOM/ARC Programme "Assistance for Families in Jaffna District Affected by Tsunami".

The specific duties of the field assistant are as follows:
1. Undertake field visits and monitor the project activities
2. Collecting information to implement community projects
3. Follow up the beneficiary involvement in project activities
4. Conducting surveys on availability of resources and opportunities
5. Propose and undertake action on operational procedures affecting project implementation and management within the Jafna district
6. Provide technical assistance to government officials and other partners in the planning, implementation, monitoring and evaluation of projects.
7. Compile and draft reports on programme activities.
8. Delegate daily work to Project Assistants and supervise their work.
9. Perform other duties as may be assigned.

*Qualification:*
1. Degree or Diploma in Management, social development or equivalent field
2. Five years experience in the field of project implementation required (preferred with NGOs)
3. Ability to work in tsunami affected area
4. Spoken & written fluency in English & Tamil. Knowledge in Sinhala language is an added qualification.
5. Management skills and liaison with GOSL as well as private partners are required
6. Basic computer literacy and report writing skills are needed.

Interested candidates please send in your updated resumes with immediate contact detail and names of two non-related referees to reach IOM, No:70 Temple Road, not later than February 26th 2006, at 1630 hrs. (Only short-listed applicants will be contacted). Please mention the post on the left hand corner of the envelope.

| Mission To Srilanka - Colombo | Sub office - Jaffna |
|---|---|
| 1 Police Park Place.Colombo 5 . Srilanka<br>Tel:+94.11.5361941.Fax:+94.11.5361944.E-mail: iomsl@sltnet.lk . Internet:www.iomsrilanka.org | 70, Temple Rd., Jaffna, Srilanka<br>Tel:+94.21.2227680<br>E-mail:iomja@sltnet.lk |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக மாணவர்களைச் சேர்க்கும்போது எந்தவித நன்கொடையும் பெறக்கூடாது

## முல்லை. வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அறிவுறுத்து

முல்லைத்தீவு,பெப்.18

பாடசாலைக்கு மாணவர்களைப் புதிதாக அனுமதிக்கும் போது எந்தவிதமான நன்கொடைகளும் பெறப்படக்கூடாது என்று முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் சகல பாடசாலைகளுக்கும் அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அவர் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைத்துள்ள அறிவுறுத்தல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பாடசாலைகளில் 2006 ஆம் ஆண்டில் மாணவர்களைச் சேர்க்கும் போது அவர்களிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்ட வசதிகள் சேவைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அதுவும் வருட முழுத்தொகையையும் செலுத்தமுடியாதவர்கள் விடயத்தில் தவணைக்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளலாம். எவ்வாறேனும் பெறப்படும் தொகைக்குப் பற்றுச்சிட்டு வழங்கப்படவேண்டும்.

இடம்பெயர்ந்து ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்தவர்களிடம் எத்தொகையும் அறவிடக்கூடாது. அத்துடன், என்ன காரணத்திற்கேனும் அங்கீகாரம் பெறப்பட்ட வசதிகள் சேவைக் கட்டணத்தைத்தவிர மேலதிக பணம் அல்லது நன்கொடை கோரப்படவும் கூடாது. பெறப்படவும் கூடாது. பாடசாலைக்குத் தளபாடம், வேறு உபகரணங்கள் தேவை எனக்கூறி பணம் பெறவும் கூடாது. இது தொடர்பாக என்னிடம் எழுத்துமூல அனுமதி பெற்றால் மட்டும் நன்கொடைகள் பற்றி பரிசீலிக்கலாம்.

பணம் தராத காரணதிற்காக மாணவரைச் சேர்க்கமுடியாதெனக் கூறுவதாகப் பல முறைப்பாடுகள் இதுபற்றிக் கிடைத்துவருவதால் இக்கடிதம் அனுப்பிவைக்கப்படுகிறது.

கல்வி அமைச்சின் செயலாளர் 'மாணவரிடம் பணம் பெற்றால் தகுந்த தண்டனை வழங்கப்படும்' என பத்திரிகைகளிலும், வானொலியிலும் அடிக்கடி அறிவிப்பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவும்.

பாடசாலை மாணவர் வசதிக்காகவே சேவை உள்ளீட்டில் பணம் ஒதுக்கப்படுகிறது. எனவே, தேவையற்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் முகம்கொடுக்காதிருத்தலை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துகிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-353)

# உணவகங்களில் திடீர் சோதனை

தமிழீழ சுகாதார சேவைகளின் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்ட முல்லைநகர், உண்ணாபுலவு, சிலாவத்தை, உடையார்கட்டு, வள்ளிபுனம், தேவிபுரம் உள்ளடங்கலான பகுதிகளில் அமைந்த உணவகங்கள், தேநீரகம், குளிர்பான நிலையங்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுச் சுகாதாரக் குறைபாட்டுடன் காணப்பட்ட நிலையங்களுக்கு அடையாளக் குற்றப் பணம் அறவிடப்பட்டது. அங்கு பெரும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இரு உணவங்கள் 'சீல்' வைக்கப்பட்டன. (த)

# அக்கராயன் பகுதியில் பரவலாக சமகால அரசியல் கருத்தரங்குகள்

பரந்தன்,பெப்.18

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திலுள்ள கோணாவில், ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு கடந்த 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோணாவில் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 10.30 மணிக்கு அக்கராயன் பிரதேச ஊரக வளர்ச்சிப் பொறுப்பாளர் வேந்தன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் சிறப்புரைகளை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மாறன், அக்கராயன் பிரதேச பரப்புரைப் பொறுப்பாளர் நாகேஸ் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

கோணாவில் பிரதேசத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான மக்கள் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கான சமகால அரசியல் கருத்தரங்கு அன்று பிற்பகல் 4.30 மணிக்கு ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை முன்றிலில் தமிழீழ நிர்வாக சேவையைச் சேர்ந்த போராளி சி.தமிழ்பிறை தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ நிர்வாக சேவைப் போராளியான ஐ.இசையமுதன் நிகழ்த்தினார்.

கருத்துரைகள் இப்பகுதி கிராம சேவையாளர் சி.சிவனேசன், ஊற்றுப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.சின்னையா, ஊரக வளர்ச்சித் தலைவர் கோ.நாகராசா ஆகியோர் வழங்கினார்கள்.

இப்பிரதேசங்களில் தொடர்ந்து சமகால அரசியல் கருத்தரங்குகள் இடம் பெற்றுவருகின்றன. (த-352)

# இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் அன்புச் சோலை மூதாளர் இல்லத்துக்கு உதவி

கிளிநொச்சி,பெப்.18

இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினரால் கிளிநொச்சி அன்புச் சோலை மூதாளர் பேணலகத்திற்கு 50 மெத்தைகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 15ஆம் திகதி இளையோர் செயற்பாட்டு நிறுவனத் தலைவர் பத்மநாதன் மூதாளர்களுக்கான படுக்கை மெத்தைகளை மாவீரர், போராளிகள் குடும்ப நலன் காப்பகத்துணைப் பொறுப்பாளர் பரஞ்சோதியிடம் கையளித்தார்.

இளையோர் செயற்பாட்டு நிறுவன நிதிப் பணிப்பாளர் இயலரசன், விளையாட்டுத்துறை ஊடக இணைப்பாளர் தேவன், அன்புச் சோலைப் பொறுப்பாளர் கிரிதரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(த-203)



கிளிநொச்சி அன்புச் சோலை மூதாளர் பேணலகத்திற்கு மெத்தைகள் வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத் தலைவர் மெத்தைகள் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (203)

# புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மாணவியின் நாட்டிய அரங்கேற்றம்

புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் மாணவியும் நடன கலா வித்தகர் திருமதி சாம்பவி கண்ணதாசனின் மாணவியுமான செல்வி தவரட்ணம், ஜனரஞ்சனியின் நடன அரங்கேற்ற நிகழ்வு கடந்த 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் திருமதி ல.குணசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றினார். விழாச் சுடர்களை வருகைதந்திருந்த கலாவித்தகர்கள், போராளிகள் ஆகியோர் ஏற்றினார்கள்.

சலங்கைப் பூசையினை புதுக்குடியிருப்பு சிவன் ஆலயக் குருக்கள் நடத்தினார். தலைமை உரையினைத் தொடர்ந்து ஆசியுரைகளை ஆனந்தபுரம் கிருஷ்ணர் ஆலயக் குருக்கள் இராமசாமி, தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, திருமதி சாந்தினி சிவனேசன், முல்லை. கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச.நாகரட்ணம், முல்லை. வலய கல்வித் திணைக்களப் பிரதித் திட்டப் பணிப்பாளர் பேரின்பநாயகம், விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமார், பரத சூடாமணி பேரின்பநாயகம் சிவகுரு ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

இதில் பெருமளவான மக்கள், இசைக்கலைஞர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-307)

# கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

கிளிநொச்சி,பெப்.18

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்ட 'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் ஊடாக மூன்று லட்சம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்தவாரம் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து இந்த உபகரணங்களை கரைச்சிப் பிரதேச செயலர் க.சுலோசினி வழங்கினார். சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர் மா.பத்மராஜும் கலந்து கொண்டார். (த)




# குளத்துக்கு அருகில் பயிர்ச்செய்கை! இதனால் அணைக்கட்டுக்குப் பாதிப்பு

ஒட்டுசுட்டான்,பெப்.18

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்திற்குட்பட்ட சில சிறிய நீர்ப்பாசனக்குள அணைக்கட்டில் வேலிகளை போட்டு குளக்கட்டு அணையின் அருகே பயிர் செய்துவருவதால் குளக்கட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக கற்சிலைமடு, சின்னக்குளம் காஞ்சூரமோட்டைக்குளம், துவரமோட்டைக்குளம், பெருங்கருவேப்பமுறிப்புக்குளம் போன்ற பலகுளங்களின் அணைக்கட்டருகே வேலிகள் போடப்பட்டுள்ளன, காட்டுப்பக்கமாக உழுது மக்கள் பயிர் செய்து வருவதுடன் அருகே குடியிருக்கின்றனர்.

கமநலச் சேவை நிலையம் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளாததால் அணைக்கட்டுக்கு பாதுகாப்பற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அணைக்கட்டிலிருந்து அரச கட்டளைச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கப்பால் வேலிகளை அமைத்து பயிர் செய்வதுடன் குடியிருப்புக்களையும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (த-341)

# வவுனியா கிராமிய வங்கி நடமாடும் வங்கிச் சேவை

வவுனியா கிராம அபிவிருத்தி வங்கியினால் நடமாடும் வங்கிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிராம அபிவிருத்தி வங்கி இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வங்கியின் 2ஆம் ஆண்டு நிறைவினையொட்டி கடந்த 9ஆம் திகதி மாங்குளம் பொது நோக்கு மண்டபத்தில் இச்சேவை நடைபெறவுள்ளதாகவும் தொடர்ந்து இச்சேவை நடைபெறும் எனவும் தெரிவித்த இணைப்பாளர் இவ்வங்கியில் தளிர் சேமிப்புக்களை ஆரம்பிக்கும் ஒவ்வொருவருக்கும் பெறுமதிமிக்க பரிசில்களும் வழங்கப்பட உள்ளதாகத் தெரித்தார்.

(த-341)

# நூல்கள் அன்பளிப்பு

லண்டனில் வசித்துவரும் திருமதி குணபாலசிங்கம் தனபாக்கியம் என்பவர் தான் வெளியிட்ட ''சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்'' எனும் நூலின் ஒரு தொகுதியினை கிளிநொச்சியில் அமைந்துள்ள குருகுலம் சிறுவர் பராமரிப்பு நிலையத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். (த-307)

# செல்வநகர் பாடசாலையில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல்

கிளிநொச்சி,பெப்.18

கிளிநொச்சி, செல்வநகர் அ.த.க.பாடசாலையில் 'நிகொட்' திட்ட நிதியுதவியுடன் அமைக்கப்பெறவுள்ள நிரந்தரக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த சனிக்கிழமை உப அதிபர் இன்பவதனி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

கட்டடத்திற்கான அடிக்கல்லினைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம.பத்மநாதன் நாட்டிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஏனைய விருந்தினர்கள் அடிக்கல் நாட்டினர். (த-307)



ஜெயபுரம் அ.த.க.பாடசாலையில் நடைபெற்ற இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் [illegible] மங்கள விளக்கேற்றுவதையும் - நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஜெயபுரம் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRI LANKA RED CROSS SOCIETY

# அறிவித்தல்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

### கட்டட ஒப்பந்தகாரர்களைப் பதிவுசெய்தல்
### சுனாமி மீள்கட்டமைப்பு வீட்டுத் திட்டம்
### கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்கள்

சகல பதிவுபெற்ற ICTAD நிர்மாண ஒப்பந்தகாரர்களை மேற்படி மாவட்டங்களில் சுனாமி வீடமைப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்காக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புவோர் தங்களின் பதிவுத் தரம், கடந்த கால அனுபவங்கள், வங்கி உத்தரவாதச் சான்றிதழ், நிறுவனத்தின் சுயவிவரக்கோவை உள்ளிட்ட சகல ஆவணங்களுடன் 28.02.2006 அன்று மு.ப.10 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்டக் கிளைக்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மீளப்பெற முடியாத பதிவுக் கட்டணமாக ரூபா 5,000 அறவிடப்படும்.

தலைவர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம். (சி/47930)(32-16-45)





# FASHION BEAUTY CORNER

(Centre for Modern Women)

*புதிய வகுப்புகள் 20.02.2006 அன்று ஆரம்பமாகின்றது. இப்பயிற்சி வகுப்பில் சேர விரும்புவோர் தங்கள் பெயர்களை 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளவும்.*

*விண்ணப்பங்கள் வழங்கும் நேரம்*
*காலை 9 மணி முதல் மாலை 5 மணிவரை.*

*முக ஒப்பனைகள், தலையலங்காரம், மணப்பெண் அலங்காரம் (இந்து, கிறிஸ்தவ, மடிசார், குஜராத், தஞ்சாவூர்), திருமண கேக், ஐசிங் வகைகள், மார்ச்சினி அலங்காரங்கள், சமையற் கலை (10வகை) போன்றவற்றுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.*

*இப்பயிற்சிகளை முழுமையாகக் கற்பவர்களுக்கு விசேடமாக Facial பற்றிய நுட்ப அறிவு, இமை சீர்செய்தல் போன்றவை கற்பிக்கப்படும்.*

*சான்றிதழ்கள் வழங்கப்படும்.*
*ஆரம்ப நேரம் முற்பகல் 10 மணி*

இடம்: **இல.14, அம்மன் வீதி,**
*(வீரமாகாளி அம்மன் முன் வீதி)*
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

திருமதி ஜெயவாணி கஜேந்திரன்,
*நிர்வாகி.*



UNOPS | United Nations Office for Project Services

# EXPRESSIONS OF INTEREST

The Srilanka project Implementation Facility of the United Nations Office for Project Services seeks expressions of interest for the provision of consulting individual and contract services in the following subject areas.

**Operations and Procurement Services:**

For field office in Kilinochchi we seek expressions of interest from individuals with relevant experience as:

- Office Administrator
- Logistic Officer

**Engineering Services:**

For multiple building reconstruction projects in Mullaituvu and Kilinochchi districts we seek expressions of interest from qualified individuals:

- Senior Field Engineers
- Technical Officers
- Site Engineers with B.Sc Eng.

For housing project in Kilinochchi district we seek expressions of interest from qualified individuals.

- Site Engineer with B.Sc Eng.
- Works Supervisors, Foundations, Masonary, Steel, Carpentry with minium 5 years practical experience in superviory/lead role.

For water supply schemes in Kilinochchi and Mulaitivu we seek expressions of interest from qualified individuals:

- Senior Field Engineer with more than ten years of relevant experience.
- Field Engineers with 5 years experience in water supply construction and implementation.

Interested and qualified candidates are invited to submit a concise CV, by email or by post to:

**Field Coordinator**
**UNOPS Sri Lanka Project Implementation Facility**
**230, Thirunagar, Kilinochchi.**
unopskili@unops.orq.lk

Short - listed candidates will be notified and interviews arranged in Kilinochchi and/or Jaffna. (C/47910)



# IIS

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.02.2006 } பகல் 10.00 மணி
பிரிவு II : 22.02.2006 }

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதி நாள் வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்


## யா/இணுவில் மத்திய கல்லூரி மேற்பிரிவு

### இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2006

**இடம்:** *கல்லூரி மைதானம் (இணுவில் கந்த சுவாமி கோயிலுக்கு அருகில்)*
**காலம்:** *18-02-2006 சனிக்கிழமை பிற்பகல் 2மணி*
**தலைவர்: திரு.துரை. எங்கரசு** *(கல்லூரி அதிபர்)*
**பிரதம விருந்தினர்:** *வைத்தியகலாநிதி* **அ.பேரின்பநாதன் B.V.Sc**
[கல்விசார் திட்ட முகாமையாளர், சிறுவர் பாதுகாப்பு - இலங்கை]
**சிறப்பு விருந்தினர்: திரு.செ.குபேரநாதன்**
[கோட்டக்கல்விப் பணிப்பாளர்,உடுவில் கோட்டம்]
**கௌரவ விருந்தினர்கள்:**
**செல்வி ஞானபூரணம் பொன்னையா**
[ஓய்வுபெற்ற ஆசிரியை,யா/இணுவில் மத்திய கல்லூரி]
**செல்வி உமா சுந்தரலிங்கம்**
[திட்ட அலுவலர், சிறுவர் பாதுகாப்பு - இலங்கை]
**செல்வி கிருஸ்ணா சின்னத்தம்பி**
[திட்ட அலுவலர், சிறுவர் பாதுகாப்பு - இலங்கை]
**பரிசில் வழங்கல்:**
*பிரதம விருந்தினர், சிறப்புவிருந்தினர், கௌரவ விருந்தினர்*

ஆரம்ப பிரிவு சிறுவர் நூலகத்தை பிற்பகல் 1.30 மணியளவில் வைத்திய கலாநிதி அ.பேரின்பநாதன் அவர்கள் திறந்து வைப்பார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இணுவில்.* அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள், கல்லூரிச் சமூகம்.
(46926)
(32-16-45)

## மாதகல் லூர்த்துமாதா ஆலயத் திருவிழா

வலிதென்மேற்கு,பெப்.18

மாதகல் கடற்கரையிலுள்ள புனித லூர்த்து மாதா (கெவி) ஆலய வருடாந்த திருவிழா இம்முறை மாதகல் புனித தோமையார் ஆலய வளவில் நடைபெறவுள்ளதாக மாதகல் பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழா செபமாலை திருப்பலி, நற்கருணை ஆராதனை ஆகியன நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணிக்கு யாழ். மறை மாவட்ட ஆயர் வரவேற்று திருப்பலி ஒப்புக்கொடுப்பார். (எ-135)

## பௌதிகவியல் ஆசிரியர் செயலமர்வு

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-117)


# Jaffna College Institute of Technology, Vaddukkoddai

## VACANCIES

### Instructor/Lecturer
(Civil Engineering)

**Qualification:** B.Sc.Eng. or E.C.E. or NDT or Passed JCIT Technician Diploma or any equivalent Qualification.
**Apply with full Bio - Data to:**

**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukkoddai.**
**on or before 26th February 2006**

Short listed candidates will be called for an interview.

**T.P.: 0602213139**
**021-2228275.**
E-mail-jcit@sltnet.lk
(C/47931)



# யாழ்ப்பாணம் வணிகர் கழகம்

## பதவி வெற்றிடம்

### உதவி நிர்வாக அலுவலர்
Assistant Administrative Officer

உதவி நிர்வாக அலுவலருக்கான விண்ணப்பங்கள் ஆண் விண்ணப்பதாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**வேண்டிய தகைமைகள்**

01. குறைந்தது க.பொ.த (உயர்தரம்) வர்த்தகத் துறையில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.
02. அரச சேவையில் அல்லது ஓர் அங்கீகரிக்கப்பட்ட கம்பனியில் பதவி நிலை உத்தியோகத்தராக இருந்தவர்(Executive Clerical Service Class - I and above/Manager/Administrative Officer) மும்மொழிகளும் பேச, வாசிக்க, எழுதக்கூடியவர் விரும்பத்தக்கது.
03. கணனியில் தேர்ச்சி இருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**வயதெல்லை:** 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
**சம்பளம்:** தகைமைக்கு ஏற்ப சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரியின் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சுயகோவைச் சான்றிதழ், அத்தாட்சிப் பத்திரங்களுடன் (பிரதிகள்) கீழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு 24.02.2006ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

*இல./65, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
(சி/47924)(32-16-45)


உ
*சிவமயம்*



# அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 50ஆவது ஆண்டு பூர்த்தி மாநாடு

## (01-04-2006, 02-04 -2006)

அகில இலங்கை இந்துமாமன்றத்தின் 50ஆவது ஆண்டு பூர்த்தி நிகழ்ச்சிகள் கடந்த ஆண்டு (2005) தைமாதம் முதல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்ச்சிகளின் நிறைவாக கொழும்பில் "இலங்கை வாழ் இந்து மக்கள் எதிர்நோக்கும் சவால்களும் பிரச்சினைகளும்" என்ற தொனிப்பொருளில் மாநாடு ஒன்று எதிர்வரும் பங்குனி மாதம் 18ஆம், 19ஆம் நாள்களில் (01-04-2006 சனிக்கிழமையும் 02-04-2006 ஞாயிற்றுக்கிழமையும்) கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (11-02-2006, 12-02-2006 ஆகிய இரு நாள்களும் நடத்தவிருந்த மாநாடு நாட்டில் நிலவிய நிலைமைகள் காரணமாகப் பூலர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டுள்ளது).

**இம்மாநாட்டின் சிறப்பு அரங்குகள்**

இந்து ஆலய வழிபாடு - ஆலய நிர்வாகப் பிரச்சினைகள்
இந்து மாணவர்களின் கல்விப் பிரச்சினைகள்
இந்து மக்களின் சமூக, கலாசாரப் பிரச்சினைகளும் சிவதொண்டர் அணியின் பங்களிப்பும்.

**முக்கிய அறிவிப்பு:**

இந்த அரங்குகளில் தொகுத்து சமர்ப்பிக்கப்பட்டு ஆராயப்பட இந்து மக்களிடமிருந்தும் இந்து நிறுவனங்களிடமிருந்தும் பிரச்சினைகள் பற்றி அறிக்கைகள் (கூடிய வரையில் ஆதாரத்துடன்) சமர்ப்பித்துக்காட்டவேண்டும். கருத்துரைகள், விதந்துரைப்புகள் வரவேற்கப்படுகின்றன. அவையாவும் (இரு பிரதிகளுடன்) எமக்கு 01-03-2006இற்கு முன் கிடைக்கும் வண்ணம் அனுப்பவேண்டும்.

கிடைக்கும் அறிக்கைகள், கருத்துரைகள், விதந்துரைப்புகளைத் தொகுத்து குறிப்பிட்ட அரங்கில் சமர்ப்பிப்போம். அவற்றை மாநாட்டில் ஆராய்ந்து ஒவ்வொரு அரங்கிலும் அவ்வாறு ஆராயப்பட்ட விடயங்களை அறிக்கையாகத் தயாரித்துப் பிரசுரிக்கவும் மேலும் உரிய நடவடிக்கைகள் எடுக்கவும் மாமன்றம் ஒழுங்கு செய்யும். 50ஆவது ஆண்டு பூர்த்தி சமயத்தில் இன்றைய பிரச்சினைகளுக்கு விடிவுகாணும் எதிர்கால சந்ததியினருக்கு ஆக்கபூர்வமான சேவையைப் புரியவும் மாமன்றம் விழைகின்றது.

மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், கொழும்பில் தங்கும் விலாசம் என்பன பற்றி 01-03-2006இற்கு முன் அறியத்தந்து பதிவுசெய்யலாம். பதிவுசெய்வோர் மாநாட்டில் கட்டணமின்றி கலந்துகொள்ளலாம்.இருநாள்களும் மதியபோசனமும் காலை, மாலை தேநீரும் வழங்கப்படும். கொழும்பில் தங்கும் வசதியை தங்கள் சொந்தச் செலவில் செய்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**அகில இலங்கை இந்துமாமன்றம்**
**இல.91/5, சேர் சிற்றம்பலம்**
**ஏகார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொலைபேசி: 011 2434990**
**தொலைநகல்: 011 2344720**

**கந்தையா நீலகண்டன்,**
பொதுச் செயலாளர்,
**அகில இலங்கை இந்துமாமன்றம்.**
(சி/47923)(32-16-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் கைதிகள் மீதான சித்திரவதை; மேலும் புகைப்படங்கள் வெளியாகின!

## உலக நாடுகள் கண்டனம்; எதிர்ப்பு வலுக்கிறது அமெரிக்காவுக்கு

ஈராக் கைதிகளை குவான்டனமோ சிறையில் அமெரிக்கப் படைகள் கொடுமைப்படுத்துவது தொடர்பாக மேலும் புகைப்படங்கள் வெளியாகியிருக்கின்றன.

இந்தப் புகைப்படங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றன. இதைத் தொடர்ந்து அமெரிக்கா அந்தச் சிறையை உடனடியாக மூடிவிட வேண்டும் என்று ஐ.நா.சபையின் விசேட தூதர்கள் 5 பேர் வற்புறுத்தியுள்ளனர்.

அமெரிக்கப் படைகளிடம் கைதிகளாக உள்ள ஈராக்கியர்கள் அனைவரையும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஈராக் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்தப் புகைப்படங்கள் வெளியானதையடுத்து, மேலும் பல மனித உரிமை அமைப்புகள் அமெரிக்காவுக்கு தமது கண்டனங்களைத் தெரிவித்திருக்கின்றன.

கைதிகளை நிர்வாணமாக்கி, அவர்களது உடலில் சிகரெட்டினால் சுட்டு, கொடுமைப் படுத்துகின்ற காட்சிகளே புகைப்படங்களில் வெளியாகியுள்ளன. (த)



### மெக்ஷிக்கோவில் பஸ் விபத்து: 21 பேர் பலி; 16 பேர் காயம்!

மெக்ஷிக்கோசிட்டி,பெப்.18

அமெரிக்கா அருகில் உள்ள மெக்ஷிகோ நாட்டின் மத்திய மாநிலத்தில் உள்ள மலைப் பகுதியில் சென்ற பஸ் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்ததால், பஸ் பள்ளத்தில் வீழ்ந்தது.

இதில் 21 பேர் பலியாகினர்; 16 பேர் காயமடைந்தனர். (த)

## தாக்குதல் நடக்கும் என்று அமெரிக்காவை முன்னரே எச்சரித்தாராம் சதாம் ஹுசேன்!

வாஷிங்ரன்,பெப்.18

அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் மீது தாக்குதல் நடக்கும் என்று ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் ஏற்கனவே எச்சரித்திருந்தார் என்ற ரகசிய தகவல் கிடைத்துள்ளதாக ஏ.பி.சி. செய்தி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேன் கடந்த 1990 முதல் 2000 ஆம் ஆண்டுக்குள் ஏதோ ஒரு ஆண்டில் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்து 12 நிமிடநேரம் பேசிய பேச்சுகள் அடங்கிய கசெற்றை சதாம் ஹுசேனின் உதவியாளர் ஒருவர் மூலம் பிரபல ஏ.பி.சி. நியூஸ் நிறுவனம் பெற்றுள்ளது.

அதில் சதாம் ஹுசேன் பேசும்போது, பயங்கர சேதத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் மூலம் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளை தீவிரவாதிகள் தாக்குவார்கள் என்று கூறியுள்ளார்.

இதை உறுதிப்படுத்தும் வகையில்தான் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள வோஷிங்ரன், நியூயோர்க் நகரங்கள் மீது தீவிரவாதிகள் மிகப்பெரிய தாக்குதலை நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

குவைத் நாட்டின் மீது 1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதி ஈராக் படையெடுத்தது. இதனையடுத்து, வளைகுடாப் போர் ஏற்பட்டது. இந்தப் போரில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்காவும் களத்தில் குதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதியை நினைவுபடுத்தும் வகையில் 1900ஆம் ஆண்டிற்குப் பிறகு ஏதோ ஒரு ஆண்டு ஓகஸ்ட் 2ஆம் திகதி இந்த ரகசிய கசெற் பதிவு செய்யப்பட்டு இருக்கலாம் என்று 'ஏ.பி.சி' செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக் ஜனாதிபதி மாளிகையில் சதாமின் இந்தப் பேச்சு பதிவு செய்யப்பட்டுள்ளது. அணு ஆயுதமோ அல்லது ரசாயான ஆயுதமோ பயன்படுத்தி அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளில் நடத்தப்படும் தாக்குதல்களைத் தடுக்கமுடியாது என்றும் சதாம் தனது பேச்சில் கூறியுள்ளார்.

அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் மீது ஈராக் தாக்குதல் நடத்தாது என்றும் - ஆனால், தாக்குதல் நடக்கும் என்ற தகவல் தங்களுக்கு கிடைத்துள்ளதாகவும் அந்த கசெற்றில் சதாம் கூறுவது பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## பிரிட்டிஷ் இராணுவ ஊழியர்கள் மூன்று பேர் ஈராக்கில் கடத்தல்

பாஸ்ரா,பெப்.18

ஈராக் நாட்டில் பிரிட்டிஷ் இராணுவ ஊழியர்கள் 3 பேரை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்திச் சென்று விட்டனர்.

ஈராக் நாட்டில் பாஸ்ரா நகரில் பிரிட்டிஷ் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இங்கு இராணுவ வீரருக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்யும் பணியை ஊழியர்கள் மேற்கொண்டு வந்தனர். இவர்களில் 3 பேர் மர்ம நபர்களால் கடத்தப்பட்டனர் என்று பிரிட்டிஷ் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

பாஸ்ரா நகரில் முகாமிட்டுள்ள பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கும் உள்ளூர் பொது மக்களுக்கும் இடையே மோதல் போக்கு நீடித்து வருகிறது. இந்த நிலையில் ராணுவ ஊழியர்கள் கடத்தப்பட்டது மோதல் போக்கை அதிகரிக்கச் செய்யும் என அஞ்சப்படுகின்றது. (த)

## 'கார்ட்டூன் கலவரம்' தொடர்கிறது; பாகிஸ்தானில் மூன்று பேர் பலி!



பாகிஸ்தானில் பெஷாவர் நகரில் அமெரிக்காவைச் சேர்ந்த கெண்டுகி பிரைடு சிக்கன் நிறுவனத்தை ஒரு கும்பல் கடந்த செவ்வாய்க்கிழமை தீக்கிரையாக்கியது. இதில் 3 பேர் உயிரிழந்தனர்; 10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

நபிகள் நாயகத்தை அவதூறாகச் சித்தரித்து கார்ட்டூன் வெளியிட்டதால் ஆத்திரமடைந்த 200 பேர் கொண்ட கும்பல் பெஷாவர் நகரில் உள்ள கெண்டுகி பிரைடு சிக்கன் மற்றும் நோர்வே நாட்டைச் சேர்ந்த டெலிநார் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் 'மொபிலிங்க்' என்பவற்றுக்கு தீவைத்தது.

கும்பலைக் கலைக்க பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர்.

பெஷாவர் புறநகர்ப் பகுதியில் உள்ள பஸ் நிலையத்தில் 500 பேர் கொண்ட மற்றொரு கும்பல் [illegible] பஸ்கள் சேதமடைந்தன. (த)

உலக அரங்கில்

### ஈராக்கில் கார்க்குண்டு! ஏழுபேர் உயிரிழப்பு!

பக்தாத்,பெப்.18

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில், ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் ஷாலா மார்க்கெட் பகுதியில் கார்குண்டு வெடித்தது. இதில் 6 அப்பாவி ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்; 13 பேர் காயமடைந்தனர்.

2ஆவது கார்க்குண்டு, கர்ராடா மாவட்டத்தில் பொலீஸ் ரோந்து சென்றபோது வெடித்தது. இதில் அந்த வழியாகச் சென்ற ஒருவர் பலியானார்; இன்னொருவர் காயமடைந்தார். (த)

### நியூஸிலாந்தில் நில நடுக்கம்

வெலிங்டன்,பெப்.18

மத்திய நியூஸிலாந்தில் நேற்று முன்தினம் அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, பொருள் சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

நிலநடுக்க அளவு ரிச்டர் அளவுமானியில் 5.9 ஆகப் பதிவாகியுள்ளது.

நியூஸிலாந்தில் ஆண்டுக்கு 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிலநடுக்கம் ஏற்படுவதாகவும் இதில் 150 நிலநடுக்கம் மட்டுமே மக்கள் உணரக் கூடிய வகையில் இருப்பதாகவும் தகவல் தெரிவிக்கிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Faculty of Graduate Studies
## University of Jaffna

**PGD in Population Development Studies - 2004/05 Batch I Repeat Examination**

**PGD in Public Administration - 2004/05 Batch III 2nd Semester Examination**

The Examination for the above courses will commence on 06.03.2006.

Admission cards can be collected at the Office of the Dean, Faculty of Graduate Studies from 20.02.2006.

**Registar.**
**17.02.2006**


# UNIVAC
## Software Engineering Park

Singapore System Computer's Scholarship Examination 2006

சிங்கப்பூர் "சிஸ்ரம் கொம்பியூட்டர்" நிறுவனம் வழங்கும் Software Engineering பயிற்சிக்கான போட்டிப்பரீட்சை 19.02.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்போட்டிப்பரீட்சைக்கான அனுமதி அட்டை இதுவரை கிடைக்கப் பெறாதவர்கள் அனுமதி அட்டையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏற்கனவே எமது நிறுவனத்தில் குறிப்பிட்ட பயிற்சியை பூர்த்தி செய்த மாணவர்கள் தற்போது சிங்கப்பூரில் உள்ள சிஸ்ரம் கொம்பியூட்டர் நிறுவனத்தில் மேலதிக பயிற்சி பெற்று வருகின்றனர். www.syscom.edu.sg

213, Kasthuriyar Road, Jaffna T.P:077 6176476



# AIMS
#118, Palaly Road, Jaffna.

## பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I : 18.02.2006
பிரிவு II : 22.02.2006
பகல் 10.00மணி

அனைத்து கற்கை நெறிகளுக்குமான வார, வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்
AIMS, யாழ்ப்பாணம்


## 47 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
03 - 09 - 1975



இறப்பு
03 - 01 - 2006

### அமரர் சண்முகராசா கிரிதரன்(வவா)

*வையகத்தில் எம்மையெல்லாம் விட்டு - நீர்*
*விண்ணுலகம் சென்றீரோ*
*நின்னெழில் முகமே காண - நாம்*
*நினைத்துமே முடியவில்லை!*

வரியப்புலம் (மயிலணி),
சுன்னாகம். (46941)(26.17.19) **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்கள்



### அந்தோனிப்பிள்ளை மரியராஜா

(SCC கம்பனி சவூதி அரேபியா, பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், ஓய்வுபெற்ற இராணுவக் கோப்ரல்)

மல்லாகம், குளமங்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியராஜா 17.02.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை-ஞானம்மா தம்பதியினரின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம் (மட்டக்களப்பு), செபமாலை இரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மனுவேல் - மேரி தம்பதியினரின் மருமகனும் றூத் புஸ்பராணியின் அன்புக் கணவரும் றோய் (கனடா), மொறின், றெஜி (லண்டன்), சாந்தி (லண்டன்), ஜெசி (லண்டன்), ரவிச்சந்திரன் (செல்வன்- லண்டன்), ஜெயச்சந்திரன் (இராசன்-லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரான்லி (கனடா), செல்வராஜா (செல்வம்), இரகுநாதன் (லண்டன்), மாலினி (லண்டன்), அமலராணி (லண்டன்), றூபஸ் (லண்டன்) ஆகியோரின் மாமனும் யோசப்பின் ஜெனீபா (சரோன்), நொய்லின், டினியா, டினேசியா, மாஷல், வேஜின், சிறிஸ்ரினா, யோயல், ஜொய்சி, றோகர் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**செல்வராஜா** *(மருமகன்)*

**மல்லாகம்.** (46942)(39.26.17.19)

### திருமதி பதஞ்சலி வல்லிபுரநாதர்



சிவசக்தி வாசா, நாகர்கோயில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தற்போது இல.61, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையில் வசித்து வந்தவருமாகிய திருமதி பதஞ்சலி வல்லிபுரநாதர் அவர்கள் 16-02-2006 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற சதாசிவம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வல்லிபுரநாதரின் (பொன்னையா வாத்தியார்) அன்பு மனைவியும் தில்லைநாதன் (உதவி முகாமையாளர், இலங்கைவங்கி, கொழும்பு தலைமைக் காரியாலயம்), பத்மநாதன் (மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), கணேசநாதன் (மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, வவுனியா), சிவயோகநாதன் (ஜேர்மனி), சிவசக்தி (ஜேர்மனி), சோதிநாதன் (டென்மார்க்), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவராணி, இந்திராணி, சுபாதேவி, இந்திராதேவி, ஜெயதேவன், நிரஞ்சினி, அகிலா ஆகியோரின் அன்பு மாமியும் ரஜனி ஜெகதீஸ்வரன், (லண்டன்), ரதினி மனோராகவன் (ஹொலண்ட்), யாழினி, சிவசொரூபன் (கொறியா), சிவாஜினி, பாமதி நந்தகுமார், (சுவிஸ்), காண்டீபன், பார்த்தீபன், பிரதீபன், நவதீபன், சபேசன், அபிரா, சிவகணேசன், சசிரேகா, சிவஅனுசன், அனந்தன், யதுர்சன், கீர்த்தனா, சங்கவி, தினேஸ், தனேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் குகனன், குகனி, உதித்தா, றின்தியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19-02-2006) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**வ.பத்மநாதன்** *(மகன்)*
மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.

**61, இலந்தைக்குளம் வீதி,**
**கொழும்புத்துறை,**
**(மாம்பழம் சந்தி அருகில்).**
(46934)(26.17.19)

### நீரிழிவு நோயாளருக்கு பரிசோதனை அட்டை

தென்மராட்சி,பெப்.18

தென்மராட்சி பிரதேச நீரிழிவு நோயாளர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் விசேட மருத்துவ பரிசோதனை அட்டையை வழங்கவுள்ளனர்.

நீரிழிவு நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் இலகுவில் வைத்திய சேவை பெறுவதற்காக இந்த அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி மருத்துவமனையில் நீரிழிவு கிளினிக்குகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இந்த அட்டை வழங்கப்படும்.

ஏனைய மருத்துவமனைகளில் நீரிழிவு கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவோர் சாவகச்சேரி - யாழ். வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் கழகத் தலைவர் லயன் சி.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (எ-117)

### சுகாதார அதிகாரி பணிமனைக்கு பளையில் கட்டடம்

தென்மராட்சி,பெப்.18

பளைப் பிரதேசத்திற்கான சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான மாடிக்கட்டடம் பளையில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

பளை மருத்துவமனையின் பிரசவ விடுதி அமைந்திருந்த வளவில் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

2000ஆம் ஆண்டு வரை பளைப் பிரதேசம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட்டு வந்தது.

கிளிநொச்சி பிராந்தியத்தில் சுகாதார சேவைகள் பிரதிமாகாணப் பணிப்பாளர் பணிமனை ஆரம்பிக்கப்பட்டதையடுத்து பளையில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு இயங்கி வருகிறது. (எ-117)


# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7430467 முதல் 7440699 வரை. சீட்டிழுப்பு இல. 212 திகதி 16-02-2006

### வெற்றி எண்கள்

1 6 4 6 9 3 சுப்பர் எண் 17

ஜக்பொட் பரிசு ரூ. **10,499,500/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 10,499,500/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 86 | 5,000/= | 430,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 868 | 500/= | 484,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8687 | 50/= | 434,350/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 86057 | 10/= | 860,570/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 89 | 1,000/= | 89,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 864 | 100/= | 86,400/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8610 | 20/= | 172,200/= |
| | | மொத்தம் ரூ. 4,001,520/= | |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/= | 602,600/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 4,604,120/-

ரூ. 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 7437628-1-63 |
| காலி | 7432797-4-56 |
| கம்பஹா | 7433862-6-49 |
| நுவரேலியா | 7430784-7-93 |
| பதுளை | 7432144-1-30 |
| அநுராதபுரம் | 7436453-8-42 |
| பொலன்னறுவ | 74316?3-6-75 |
| இரத்தினபுரி | 74353?0-3-95 |

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. 10,740,975/-

தொடர் இல. 6518499 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 பெப்ரவரி 20 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
33, செண் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.



# CICS COMPUTER TECHNOLOGIES இன் கணனி கற்கைநெறிகள்

1. GIT (General Information Technology)
2. Advanced Diploma in Hardware & Networking
3. Diploma in MS Office

**GIT மாணவர்களுக்கு**

1. வகுப்புகளின் போது வினாத்தாள்கள் வழங்கி பயிற்சி கொடுக்கப்படும்.
2. அதிக நேர செய்முறை வழங்கப்படும்.
3. மாதத்திற்கு ஒரு தட..வ பயிற்சிப் பரீட்சை இடம்பெறும்.
4. ஒரு பிரிவில் 10 மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.
5. மாணவரின் வேண்டுகோளுக்கு இணங்க மேலதிக வசதிகள் வழங்கப்படும்.

**Hardware, MS Office மாணவர்களுக்கு பின்வருவன வழங்கப்படும்.**

1. நேரடிப் பயிற்சி வகுப்புகள்
2. கற்கைநெறிக்கான இலவச குறிப்புகள்
3. பயிற்சிகளுக்கு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட ஆய்வுகூட வசதிகள்
4. எமது கற்கைநெறியை பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள்

* நூலக வசதி * அங் கீகரிக்கப்பட்ட சர்வதே சான்றிதழ்
* அனுபவம் பெற்ற விரிவுரையாளர்களால் விரிவுரை மேற்கொள்ளப்படும்
* ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சி அலகுகள்.

(46932)

பிரிவு I ஆரம்பம் :-19.02.2006 காலை 8.30 பிரிவு II ஆரம்பம்:- 19.02.2006 பி.ப 4.00
பிரிவு III ஆரம்பம் :- 20.02.2006 பி.ப 4.00

தொடர்பு:-TRAINING & EDUCATION UNIT
CICS COMPUTER TECHNOLOGIES
87, PALALY ROAD, JAFFNA.
T.P.: 0777 917610, E- mail: cicsjaffna@gmail.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






# ஜேர்மன் அரசு வழங்கிய 31 ஆயிரம் நூல்களின் கண்காட்சி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்ப்பாண பொது நூலகத்திற்கு ஜேர்மன் அரசின் நிதியுதவியால் வழங்கப்பட்ட நூல்களின் கண்காட்சி பொது நூலகத்தில் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஜி.ரி.இசற் நிறுவனத்தின் ஊடாக தேச நிர்மாண மற்றும் அபிவிருத்தி அமைச்சு மூலமாக யாழ். பொதுசன நூலகத்திற்கு வழங்கப்பட்ட 31ஆயிரம் நூல்களின் கண்காட்சியே நேற்று ஆரம்பமாகியது. யாழ். மாநகரசபை ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்ப வைபவத்தில் பிரதம விருந்தினராக ஜி.ரி.இசற் நிறுவன பிரதிநிதி ஜி.ஆர்.ராஜசிங்கமும் கௌரவ விருந்தினர்களாக யாழ். அரச அதிபர் கே.கணேஸ், தேச நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளர் த.குமாரதாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து பிரமுகர்கள் சிறப்புரை நிகழ்த்தினர்.

உரைகளைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் கே.கணேஸ் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்துவைத்தார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார், அலாவுதீன் மௌலவி மற்றும் மாநகரசபை உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், மாநகரசபை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இக்கண்காட்சி தொடர்ந்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை 4 தினங்களுக்கு நடைபெறவுள்ளது. இதில் பொதுமக்கள், மாணவர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு கண்காட்சி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஜ-12-14)

பொது நூலகத்தில் நுல்களின் கண்காட்சியை அரச அதிபர் கே. கணேஸ் நாடா வெட்டி ஆரம்பித்து வைப்பதையும் வைபவத்தில் கலந்து கொண்ட மதப் பிரமுகர்களையும் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: பிரியன்)

## கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மூன்றாம் இடம்

'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் யாழ். கல்வி வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை 69 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது.

நேற்றைய உதயனின் 11ஆம் பக்கத்தில் இது தொடர்பாக வெளியான செய்தியில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை என்பது தவறுதலாக யாழ். இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை எனப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ-ர்)

# உடன்பாட்டை சீராக அமுல்......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்டு, அவை உடனடியாக நடைமுறைக்கு வராவிட்டால், எதிர்கால முன்னெடுப்புகள் எதுவும் சாத்தியப்படும் என நான் நம்பவில்லை.

எங்களின் முழுக்கரிசனையும், நிலைப்பாடும் இந்த யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கம் தொடர்பானதாகவே இருக்கும்.

கே.- பேச்சில் உடன்பாடு ஏற்பட்டால், அது வாய்மொழியளவில் ஏற்றுக்கொள்ளப்படுமா? கையெழுத்து இடப்பட்ட புதிய ஆவணமாக வருமா?

ப:- அதாவது, நாங்களோ எமது மக்களோ இனி நடைமுறைகளைப் பார்க்காமல் எதையும் நம்பமுடியாது என்ற நிலைக்கு வந்துள்ளோம்.

கடந்த 57 ஆண்டு காலமாக நாங்கள் பெற்ற பட்டறிவு அனுபவம் மட்டுமல்ல, கடந்த நான்கு வருடங்களாக நாங்கள் பெற்ற அனுபவம் மக்களிடத்தில் ஆழப்பதிந்துள்ளன.

கே:- பேச்சுகள் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையுடன் பேச்சுக்கு போகிறீர்களா?

ப:- அதாவது யுத்த சூழல் இப்பொழுதும் இறுக்கமாகத்தான் இருக்கின்றது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

ஆள்கடத்தல்கள், இராணுவச்சுற்றிவளைப்புகள், மக்களை அச்சுறுத்தி வெளியேற்றுதல் என்று தொடர்ச்சியாக இராணுவ வன்முறைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒரு தரப்பில் இருந்து மட்டும்தான் அதாவது, தமிழர் தரப்பில் இருந்து மட்டும்தான் எங்கள் தேசியத் தலைவர் வாக்குறுதி அளித்து வருகிறார். அதாவது, தமிழர் தரப்பில் இருக்கின்ற எதிர்ப்பு நடடிக்கைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, அந்த நல்லெண்ண சமிக்ஞையைத் தலைவர் காட்டிக் கொண்டிருக்கிறாரே தவிர, இலங்கை அரசோ படைத்தரப்போ எந்தவித நல்லெண்ண சமிக்ஞையையும் காட்டவில்லை.

எமது தலைவரும் சொல்ஹெய்மும் சந்தித்த பின்பு, எமது போராளி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து மனிதாபிமானப் பணியாளர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள்.

இதற்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் சுற்றி வளைப்புகள், காணாமற்போதல் என்பன தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

ஒரு தரப்பில் அதாவது, தமிழர் தரப்பில் இருந்துதான் நல்லெண்ண சமிக்ஞை இருக்கின்றதே தவிர அரசு தரப்பில் அதைக் காணக்கூடியதாக இல்லை.

கே:- கைதிகள் பரிமாற்றம் தொடர்பாக வரும் செய்திகள் குறித்து...?

ப:- இது நடக்குமாயிருந்தால் மகிழ்ச்சிப்படுவோம். இதுவிடயத்தில் சில முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். அது பயனளித்தால் நல்லதுதான்.

கே:- மனிதாபிமான பணியாளர் கடத்தல் தொடர்பாகப் பேச்சில் பிரஸ்தாபிப்பீர்களா?

ப:- நிச்சயமாக. அதாவது, கடந்த 4 வருடங்கள் அரசு மேற்கொண்ட சீர்குலைவு நடவடிக்கைகள் மற்றும் அண்மைக்காலச் செயற்பாடுகள் ஆகியன எல்லாவற்றுக்கும் தீர்வு காணப்படவேண்டும் என்று இந்தப் பேச்சில் நாம் உறுதியாக வலியுறுத்துவோம்.

கே:- துணைப் படைகளிடம் இருந்து ஆயுதங்களைக் களையும்விவகாரத்தில்கருணா குழு தொடர்பான விடயம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின் உருவானது என்றும் அது விடயத்தில் அரசு ஒன்றும் செய்யமுடியாது என்றும் அரசு கூறுகின்றது. இதுபற்றி என்ன கூறவிரும்புகிறீர்கள்?

ப:- ஒப்பந்த விதிமுறைகளில் கருணா குழு, ஈ.பி.டி.பி. குழு, தேச விரோதக்குழு என பெயர் குறிப்பிட்டுச் சொல்லப்பட வில்லை. ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட்டு அவை தாயகப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றப்படவேண்டும் என்றே விதிமுறை கூறுகின்றது. இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இது கருணாகுழு வேறு டக்ளஸ் குழு வேறு என்று வரையறுத்துச் சொல்லப்படவில்லை. இது பற்றிப் பேசுபவர்கள் ஒப்பந்த விதிமுறைகளைச் சரியாகப் பார்க்காமல் கதைப்பவர்களாகத்தான் இருக்கிறது. இது ஒரு முட்டாள்தனமான கருத்தாகத்தான் இருக்கும். இந்த ஆயுதக் குழுக்களை வைத்து அரசு குழப்பத்தை விளைவிக்கத் தான் போகிறார்களென்றால் அதன் எதிர்விளைவை, தாக்கத்தை உணர்ந்துகொள்ளும் சூழல்தான் உருவாகும் என நினைக்கின்றேன்.

கே:-கருணா விடயம் வந்தபோது, இது எமது உள்முரண்பாடு. இதில் தலையிட வேண்டாம் என்று அரசுக்கு விடுதலைப் புலிகள் கூறியிருந்தார்கள். ஆனால், கருணா குழுவின் ஆயுதங்களை களையவேண்டுமானால் ஒப்பந்தத்தில் திருத்தம் கொண்டு வரவேண்டியிருக்கும் எனத் தற்போது கூறப்படுவது குறித்து...?

ப:- எமது அமைப்புக்குள் உள்ள உள்முரண்பாடுதான் இது. ஆகவே உள்முரண்பாட்டு நெருக்கடிகளை ஏற்படுத்தியவரை எமது விடுதலை அமைப்பின் ஒழுங்கு நடவடிக்கைக்குள் உட்படுத்த வசதியாக அரசு அந்த ஆயுதக்குழுவை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். அதுவே நியாயமாக இருக்கும்.

அதைவிட்டுவிட்டு, எங்களால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவர்களை - ஓடிச் சென்றவர்களை - பற்றிப் பிடித்துக்கொண்டு அவர்களின் பெயரில் தமது புலனாய்வு அமைப்பைப் பயன்படுத்தி எமது மக்கள் பலரைக் கொன்றுவிட்டார்கள்.

ஊடக வியலாளர்கள், பேராசிரியர்கள், கல்விமான்கள், பொதுமக்கள் என அதிக எண்ணிக்கையானோரைப் படுகொலை செய்ததுடன் மனிதாபிமானப் பணியாளர்களையும் கடத்திக் கொண்டு சென்றுள்ளனர்.

இப்படியான சீர்குலைவு நடவடிக்கைகளை இவர்கள் செய்துகொண்டு இருப்பதை எமது மக்கள் ஏற்கமாட்டார்கள்.

கருணா விவகாரம் எமது உள்முரண்பாடு என்று அரசு கூறினால், உள்முரண்பாட்டுடன் சம்பந்தப்பட்டவர்களை எம்மிடம் ஒப்படைக்கவேண்டும். இதுதான் பொருத்தமான செயற்பாடாகும். அதைவிடுத்து அவர்களை வைத்துக்கொண்டு அவர்களின் பெயரில் வெறியாட்டம் புரிவதை நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

கே:- இத்தகைய அடிப்படையில் உடன்படிக்கையில் மாற்றம் கொண்டுவரும் சாத்தியம் உள்ளதா?

ப:- உடன்படிக்கையில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையேயில்லை. எல்லா விடயமும் அதில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது.

சர்வதேச அனுசரணையுடன் நீண்டகால முயற்சிகளுக்கூடாக கொண்டு வரப்பட்ட உடன்பாடு இது. இந்த உடன்பாட்டை நன்கு வாசித்து விளங்கி அதை நடைமுறைப்படுத்தினாலேயே கருணா குழு என்ன எல்லாக் குழுக்களுக்கும் சிறப்பான முடிவு கட்டப்படும்.

கே:- ஜெனீவாப் பேச்சை முடித்துக் கொண்டு ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்வீர்களா?

ப:- ஒரு சில நாடுகளுக்கு அழைத்திருக்கிறார்கள். இன்னும் அது குறித்து முடிவு செய்யவில்லை. பேச்சுகள் முடியும் [illegible]து தான் அது குறித்து அங்கு முடிவு செய்[illegible]ம். (ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா செல்லத்துரை

(இளைப்பாறிய ஆசிரியை, சென்.ஜோன் பொஸ்கோ பாடசாலை)

7/1, முதலியார் வீதி, நல்லூர் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசம்மா செல்லத்துரை அவர்கள் 14.02.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பொன்னு தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா செல்லத்துரையின் அன்பு மனைவியும் தங்கம்மா, காலஞ்சென்ற செல்லம்மா, கனகவதி, தையல்நாயகி, திருச்சிற்றம்பலம், வெள்ளியம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதகேயன் (ஆஸ்திரேலியா), கலா (ஆஸ்திரேலியா), பாலகேயன் (நியூஸிலாந்து), மாலதி (லண்டன்), சிவாநிதி (ஆசிரியை, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்), சுதாமதி (ஆஸ்திரேலியா), கேமாவதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயும் லங்காராணி, காலஞ்சென்ற சற்குருமணி, தயாநிதி, பிரபாகரன், அற்புதகுமார் (ஆசிரியர், க/நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி), வரதராஜா, ஐங்கரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆரணியா, கௌதமி, கௌசல்யா, ரஜீவன், அபிஷன், பிரசாந்தி, நிரோஜன், மலரவன், கிஷோகுமார், பிரசாந்த் (யாழ். மத்திய கல்லூரி), கஜானி, துவாரன், சிவராம், சுபேதினி, ரமேதினி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 10/1, பெயிலிவீதி, நாவலப்பிட்டி இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக இன்று (18.02.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பகவாகம மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10/1, பெயிலி வீதி,
நாவலப்பிட்டி. (46954)(30-33-34-49)

தகவல்:
குடும்பத்தினர்.



### சின்னத்தம்பி கந்தையா

(ஓய்வுபெற்ற புகையிரதப் பகுதி கண்காணிப்பாளர்)

புத்தூர்ச் சந்தியைப் பிறப்பிடமாகவும் மீசாலை ஐயாகடையடியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா அவர்கள் 17.02.2006 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்மாக்குட்டியின் அன்புக் கணவரும் திரு.திருமதி சின்னதம்பி அவர்களின் அன்பு மகனும் சிவபாக்கியம் கணபதிப்பிள்ளை, கணேசலிங்கம், இராசேந்திரம் (ப.நோ.கூ.ச.பரந்தன்), இந்திராதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லத்துரை (முன்னாள் முகாமையாளர், கரைச்சி வடக்கு), யோகம்மா, விமலாதேவி மல்லிகாதேவி, யோகலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2006) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அல்லாரை கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி. (46962)(30-33-34-49)

தகவல்:
கணேசலிங்கம் (மகன்).

மனோகரா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
இளம் புயல் ரவி, கம்னா நடித்த
இதயத்திருடன்
காட்சி நேரம்: 10.30, 1.30, 4.30, 7.30

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், திரிஷா நடித்த
ஆதி
காட்சிநேரம்: பு.நே. 11.00, 3.00

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா,பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா
நேரம்: பு.நே 10.30, 2.15,மட்டும்
24 முதல் சத்தியராஜ், பிரித்விராஜ், நமீதா.
கோவை பிரதர்ஸ்
பு.நே 10.30, 1.30,4.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
சினிமா
பரமசிவன்
புதியநேரம்:
10.30, 2.30
17.02.2006 வெள்ளி முதல்
புதியநேரமாற்றம் 10.00, 1.00, 4.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்களை விடுவிக்கக்கோரி நேற்று கிளிநொச்சியில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணியில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பேரணியில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் பேரணி முடிவில் மகஜர் கையளிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# அர்த்தமுள்ள நிரந்தர சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கு கட்சிகள் உதவ வேண்டும்

## சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி கருத்து

"அமைதிப் பேச்சுகளின்போது சர்வ கட்சிகளினதும் ஆலோசனைகளும் ஏற்கப்பட்டு அவர்களது பங்களிப்புடன் பேச்சுகள் முன்னெடுத்துச் செல்லப்படும். கடந்த காலத்தில் சமாதானப் பேச்சுகள் நடைபெற்றதைப் போன்று இரு தரப்பினர்களுக்குமிடையில் மட்டும் பேச்சுகள் நடைபெற மாட்டாது"

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் அமைதிப் பேச்சுகள் தொடர்பாக நாம் முன்னெடுத்த இரண்டு யோசனைகளின் அடிப்படையில் தற்போது சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன. ஒன்று ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து இயங்கும் சகல கட்சிகளினதும் ஆலோசனைகளுடன் ஒரு பொது அமைப்பின் ஊடாக இதனை முன்னெடுப்பதென தீர்மானித்தோம். அதன்படி சகல கட்சி மாநாட்டை நாம் கூட்டியுள்ளோம், இரண்டாவது அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் யோசனைகளுக்கு அடங்க விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குச் சமமான முறையில் பேச்சுகளை ஆரம்பிக்கத் தீர்மானித்தோம். இதன் அடிப்படையிலேயே எமது பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஜெனீவாவில் நடைபெறும் பேச்சுகளில் கலந்துகொள்ளும் அரச குழுவினருக்கு நாம் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளோம், அதில் பொதுவான இந்த சர்வகட்சி மாநாட்டு யோசனைகள் குறித்தும் அதனோடு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்தும் விளக்கியுள்ளோம். இது குறித்து அரச பிரதிநிதிகள் ஜெனீவா மாநாட்டின் போது ஆராய்வார்கள். இதேவேளை, யுத்த நிறுத்த உடன்படிக்கை குறித்து பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக மேலதிகமாகச் செய்ய வேண்டியவை என்ன? யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்வீர்களா? அல்லது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ஒழுங்கு முறையில் உறுதிப்படுத்துவீர்களா? என்பவையேயாகும். இதுகுறித்து நான் சொல்வது என்னவென்றால், இதைப்பற்றி நாம் பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை, அதில் தொங்கி நிற்பதிலும் அர்த்தமில்லை. இதனை சகல கட்சிகளும் கூடிய ஒரு பொது குழுவின் ஊடாக நாம் முன்னெடுத்துச் செல்வதே நல்லது.

சில கட்சிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தம் பற்றி பல்வேறு கோணங்களில் விமர்சித்தாலும் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்வது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்பதேயாகும்.

எனவே, நாம் விரும்புவதெல்லாம் அர்த்தமுள்ள யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இந் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் வழிவகைகளை காண்பதேயாகும்.

இதற்காக நாம் எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பும் முக்கியமானது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார்.

மேற்படி கூட்டத்தில் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. மற்றும் ஈ..பி.டி.பி என்பனவற் றின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

(ஐ-க)

## நான்கு போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஜராகி, சட்ட மா அதிபரின் அறிவித்தலைத் தான் பெற்றிருப்பதாகவும் வழக்கை பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து நடத்தாமல் சாதாரண குற்றவியல் சட்டத்தின்கீழ் நடத்த ஆலோசனை பெறப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனை அடுத்தே வழக்கு சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் மாற்றப்பட்டு இவர்கள் நால்வரும் தலா 2,500 காசுப் பிணையிலும் 20ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர்.

திருமலை துறைமுக பொலீஸ் நிலையத்தில் ஞாயிறு தோறும் காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வந்து கையொப்பமிடுமாறும் இவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி கா. சிவபாலன், சட்டத்தரணி ஆ. ஜெகசோதி ஆகி யோர் ஆஜராகி இருந்தனர்.

விடுவிக்கப்பட்ட நால்வரும் திருமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரி கெலன் அம்மையாரினால் பொலீஸ் பாதுகாப்புடன் ஓமந்தைக்கும் பின்னர் அங்கிருந்து கிளிநொச்சிக்கும் கூட்டிச் செல்லப்பட்டனர்.

திருமலைக்கடலில் வைத்துக் கடந்த ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி இவர்கள் கைதாகி இருந்தனர்.

(ஐ-க-190)

## ஜெனீவாப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுசரணையாளரான நோர்வேத் தரப்பின் ஒரு பிரதிநிதியும், பேச்சு நடத்தும் இட ஏற்பாட்டாளர்களான சுவிஸ் அரசின் சார்பில் ஒரு பிரதிநிதியும் பேச்சில் அங்குரார்ப்பண நிகழ்வில் ஆற்றும் உரை பற்றிய செய்தியை ஊடகவியலாளர்கள் சேகரிக்க அனுமதிக்கப்படுவர். அச்சமயம் அரச, புலிகள் தரப்பு பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதைப் படம் எடுக்கவும் ஊடகவியாலாளர் அனுமதிக்கப்படுவர்.

அத்தோடு, ஊடகவியலாளர் பேச்சு நடத்தப்படும் இடத்திலிருந்து அப்புறப்படுத்தப் படுவர்.

அன்றைய தினமோ, அடுத்த நாளோ, பேச்சின் இடையேயோ ஊடகவியலாளர்கள் பேச்சுக் குழுவினரைச் சந்திக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். இல்லையேல் இரு தரப்பினரும் தனித்தனியாக பத்திரிகையாளர்களைச் சந்திக்கலாம்; அல்லது சந்திக்காமல் போகலாம்.

இதுவே தற்போதைய நிலை என்றும் - பத்திரிகையாளர்களுடன் தொடர்புறுவதை கூடியவரை தவிர்க்கு [illegible]டியான ஓர் அழுத்தம் சம்பந்தப்பட்ட தரபபினருக்கு இலங்கை அரசுப் பக்கத்தில் கிடைத்திருப்பதாகவும் - தெரியவருகிறது. (ஐ-க)

## மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலை செய்யப்படவுள்ளார். கிளிநொச்சி தமிழீழ நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு ஆஜர் செய்யப்பட்ட பின் இவர் விடுதலை செய்யப்படுவார் என்று புலிகளின் ஊடகப் பிரிவு ஒருங்கிணைப்பாளர் தயா மாஸ்டர் தெரிவித்தார்.

விடுதலையாகும் பொலீஸ் உத்தியோகத்தர் புலிகளின் சமாதான செயலகம் ஊடாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஒப்படைக்கப் படுவார்.

(ஐ-190)

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் இராசநாயகத்திடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் இ.கணேசபிள்ளை, செயலாளர் வே.சுப்பிரமணியம் ஆகியோர் ஒப்பமிட்டு இந்த மகஜரைக் கையளித்தனர்.

(ஐ-190)

## ரெலோ காரியாலயம் மீது நேற்று இரவு குண்டு வீச்சு

கொழும்பு, பெப். 18

மட்டக்களப்பு ஆனைப்பந்தி ஸ்ரீசபாரட்ணம் வீதியிலுள்ள ரெலோ அலுவலகத்தின் மீது நேற்று இரவு 9.30 மணியளவில் கைக்குண்டு வீச்சு இடம் பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு ரெலோ அமைப்பின் பிரசாரச் செயலாளர் எஸ். விமலராஜ் இத்தகவலை 'உதயனுக்கு' தெரிவித்தார்.

மட்டு. மாநகரசபைக்கு மேயர் வேட்பாளராகப் போட்டியிடும் நித்தியானந்தன் இந்திரகுமாரும் (பிரசன்னா) மாவட்ட அமைப்பாளர் ரி. லோகநாதனும் அலுவல கத்தில் சில ஏற்பாட்டுப் பணிகளை மேற்கொண்டிருந்த வேளையிலேயே இந்தக் கைக்குண்டு தாக்கல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காரியாலயத்தின் பின்புறமாக இருந்து எறியப்பட்ட இந்தக் கைக்குண்டு விழுந்து வெடித்தபோது எவரும் பாதிக்கப்படவில்லை.

இச் சம்பவம் குறித்து மட்டு நகர் அதிரடிப் படையினர் அங்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க)

## புத்தளத்தில் ஹர்த்தால்

புத்தளம்,பெப்.18

முகமது நபியை இழிவு படுத்தும் வகையில் டென்மார்க் மற்றும் சில நாடுகளில் கேலிச் சித்திரம் ஒன்று பிரசுரிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நேற்று புத்தளத்தில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த ஹர்த்தால் காரணமாக புத்தளத்தில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

அரசாங்க அலுவலகங்கள் பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. 10 முஸ்லிம் அமைப்புகள் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கான அழைப்பை விடுத்திருந்தன.

(ஐ-190)

## பிரதேசசபை தலைவர் சுட்டுக்கொலை

கொழும்பு,பெப்.18

அம்பலாங்கொடை வலப்பிட்டிய பிரதேச சபைத் தலைவர் ஸ்ரான்லி தவுறு நேற்று மாலை சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஐ.தே.கட்சி பிரதேசசபைத் தலைவரான இவர் நேற்று மாலை 6.45 மணியளவில் வாகனம் ஒன்றில் பயணித்துக்கொண்டிருந்த போது இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாக அம்பலாங்கொடை பொலீஸ் தலைமைப் பரிசோதகர் உப்புள அரியரெத்தன தெரிவித்தார்.

அடையாளம் தெரியாத துப்பாக்கி தாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபின்னர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-190)


**மரண அறிவித்தல்**

**திருமதி றோசம்மா குறூஸ் (ராசம்மா)**

இல.9, மாட்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் றக்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட றோசம்மா குறூஸ் (ராசம்மா) அவர்கள் 16.02.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குறூஸின் அன்பு மனைவியும் திரேசம்மாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற றோஸ்மலர், நீற்றா, வில்பிரட், மேரி மாகிறேற் (கனடா), விக்ரர் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (18.02.2006) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18/1, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.* (46963) தகவல்: பிள்ளைகள்.

**வழிகாட்டல் கருத்தரங்கு**

**aat & Chartered Accountancy**

கற்கை நெறிகள் பற்றி பூரண விளக்கமளிக்கப்படவுள்ளது.

| | |
|---|---|
| இடம் : | IPAS விரிவுரை மண்டபம் |
| காலம் : | இன்று (18.02.2006) சனிக்கிழமை |
| நேரம் : | பிற்பகல் 3 மணி |

**IPAS** 199, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (பிறிமியர் பேக்கரி மேல்மாடி) தொ.பே.: 0777 563294, 0777 270452.

இக் கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் வழங்கப்படும். மேலும் தகுதியான மாணவர்கள் பிரபல்ய கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் யாழ்.கிளை அலுவலகத்தில் Accounts Trainees ஆக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

**மாபெரும் கருத்தரங்கு**

**'கிறிஸ்தவ நாகரிகம்'**

BRO S. J. L. டானியல்

ஆரம்பம்: 19.02.2006 பி.ப. 3 மணி

**BEACON** யாழ் நகர். (46929)

**புதிய யூனிவேசல் அக்கடமி**

(யா/இந்து மகளிர் கல்லூரி அருகில்)

**A/L2008**

அளவையியல் **P.கமல்**

ஆரம்பம்:18.02.2006 சனி 9.30 a.m (N.T.)

புதிய அனுமதிகள் வழங்கப்படும்.

**பிறைற்றின் கல்வி நிலையம்**

சங்கத்தானை சாவகச்சேரி.

**AL 2008** கலை,வர்த்தக பிரிவுகள்.

யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பில்

ஆரம்பம்: 20.02.2006 திங்கள் 4 p.m.

* வரலாறு:- S. சுஜிகரன்
* தமிழ்:- சிவ. முகுந்தன்
* இந்துநாகரிகம்:- } N. சுதமதி
* இந்து சமயம்:- }
* புவியியல்:- கிரி
* அளவையியல்:- S.R.J.சுதன்
* பொருளியல்:- S.S. சிறி
* கணக்கீடு:- S. சயந்தன்
* வர்த்தகம்:- மரி
* ஆங்கிலம்:- K. நிஷாந்தன்

(46930)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org